26 SEP 2012

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 இதழ்: 14 பக்கங்கள்: 08 திகதி 09-09-2012 விலை: 15.00

## இளையோரே! நம்பிக்கை விளக்காக திகழுங்கள்!

**- தேசிய இளையோர் தினத்தை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநர் அழைப்பு**



முப்பதாண்டு காலப் போரின் முடிவில் பல்வேறு வித மான துன்பங்களையும் அனுபவித்து துவண்டு போன எமது மக்கள் மீளவும் எழுந்து நிற்க எத்தனிக்கும் காலம் இது. மீளக்குடியேறி அழிந்து போன அனைத்தையும் மீளக்கட்டி யெழுப்ப முயலும் இந்நாட்களில் மக்களுக்கு மிக மிக அவசிய மானது நம்பிக்கையேயாகும். ஒரு சமுதாயத்தின் நம்பிக்கை விளக்கு அந்தச் சமுதாயத்தின் இளையவர்களே. அதனால் தான் எமது சமூகத்தை மீளக் கட்டியெழுப்பும் பொறுப்பு அவர்களின் தோள்களில் விழுகிறது.

இந்நிலையில் எமது திருத்தந்தை இவ்வருடம் அக்டோபர் 11ம் திகதி முதல் விசுவாச ஆண்டைப் பிரகடனப்படுத்தியிருப்பதை எமது கத்தோலிக்க இளையோர்கள் கருத்தில் எடுக்க வேண்டும். திருத்தந்தை யின் அழைப்பை ஏற்று தமது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதோடு மற்றவர்களின் நம்பிக்கையையும் வளர்க்க அவர்கள் முன்வர வேண்டும்.

இதனை நோக்கமாகக் கொண்டே இவ்வாண்டுக்கான தேசிய இளையோர் ஞாயிறின் தொனிப் பொருளாக "விசுவாசத்தில் வளர்ந்து ஆண்டவரில் அக்களிப்போம்" என்ற வாக்கியம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே ஆலய, பங்கு, மறைக்கோட்ட, மறைமாவட்ட மட்ட இளையோர் ஒன்றியங்களும் அமைப்புக்களும் இளையோரின் விசுவாச வாழ்வைக் கட்டியெழுப்பி செயற்பாடுள்ள கிறிஸ்தவ இளையோர்களை உருவாக்குவதில் முனைப்புக்காட்ட வேண்டும். இளையோர்கள் எழுச்சி கொண்டு சமூகத்தின் நம்பிக்கை விளக்காக திகழ முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இயக்குநா அருட்பணி. ம.வி.இ.இரவிச்சந்திரன் •இளையோர் ஞாயிறு தொடர்பாக தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## யாழ். ஆயர் இல்லத்தில் ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி



யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இலங்கைக் கான ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி யாழ். ஆயர் இல்லத்தில் சமாதானத்துக்கும் நல் லெணணத்துககுமான குழு வினரை 24-08-2012 அன்று சந்தித்து சமகால நிலைப் பாடு குறித்து கலந்துரை யாடினார்.

யுததம் முடிவடைந்து மூன்று வருடங்கள் நிறை வடைந்துள்ள நிலையிலும் தமிழ் மக்களது அடிப்படை வாழ்வியலில் எள்ளவும் முன்னேற்றம் ஏற்படவில்லை மாறாக இராணுவப் பிர சன்னம் அதி கரித்து வரு கின்றது. இத னால் அரசாங் கம் கூறும் சமா தானத்தின் பய னாக தமிழ் மக்கள் எதனை யும் அனுபவிக்க முடியவில்லை என சமா தானத்துக்கும் நல்லெண் ணத்துக்குமான குழுவினர் விரிவாக குறிப்பிட்டனர். இவற்றைக் கேட்டறிந்த யசூசி அகாசி போரை வெல்வது கடினம் அதனை விடக் கடினமானது சமா தானத்தை வெணறெடுப்பது. எனவே சமாதான முயற்சி மீதான நம்பிக்கையை தமிழ் சமூகம் தளரவிடக் கூடாது. தாமதித்தாலும் நிச்சயமாக தமிழ் மக் களுக்கு நியாயமான தீர் வொன்றை சர்வதேசம் பெற்றுத் தரும் என உறுதியளித்தார்.

## செபமாலைதாசர் சபையின் புதிய பணித் தலைவர்கள்

கடந்த யுன் மாதம் 27ம் திகதி தொடக்கம் யூலை மாதம் 08ம் திகதி வரை செபமாலைதாசர் சபையினரின் தலைமைச் சங்கம் இந்தியாவில் ஒன்று கூடியது. இதன் முன்னாள் சபைத்தலை வராக எமது இலங்கை நாட்டின் அருட்பணி ஏ.எம். ஸ்ரீபன் (செ.தா) தலை வராக இருந்து 06 வருடங் கள் பணிபுரிந்தார்.

06.07.2012 அன்று புதிய சபைத் தலைவரும் ஆலோசகர்களும் தேர்ந் தெடுக்கப்பட்டனர். புதிய சபைத் தலைவராக இந்தி யாவைச் சேர்ந்த அருட் பணி. கே.பி. சேவியர் (செ.தா) அவர்களும் முதல் ஆலோசகராக (V.G) இலங்கையைச் சேர்ந்த அருட்பணி. செ. ஜஸ்ரின் ராஜ் (செ.தா) அவர்களும், ஏனைய ஆலோசகர்களாக இந்தியாவைச் சேர்ந்த அருட்பணி. வில்சன் (செ.தா) அருட்சகோதரர்கள் யோன் லக்கரா (செ.தா), போல் சில்வெஸரா் (செ.தா) ஆகியோர் தேர்ந்தெடுக் கப்பட்டனர்.

புதிய தலைமைச் சங்கம் தமது முதலாவது குழு அமர்வில் (09-08-2012) இலங்கைக்குரிய மாகா ணத் தலைவரையும், ஆலோசகர்களையும் தெரிவு செய்தது. தலை வராக அருட்பணி. கொட் வின் நையில் (செ.தா) தெரிவு செய்யப்பட்டார். அவரின் முதல் ஆலோ சகராக அருட்பணியாளர் இ. ஜோச் (செ.தா), ஏனைய ஆலோசகராகர் களாக பிரான்சிஸ் ஜெயம் (செதா), அனில் கிருஷாந்த (செ.தா) ஆகியோர் நிய மனம் பெற்றனர்.

செ. யோசப் ஆச்சிரமம்
உசன்

## உலகத் திருச்சபையின் 'விசுவாச ஆண்டின்' முக்கிய நிகழ்வுகள்

ஜப்பசி மாதம் ஆரம்பமாகும் உலகத் திருச்சபையின் விசுவாச ஆண்டில் நிகழவிருக்கும் முக்கிய நிகழ்வுகளின் பட்டியல் ஒன்றை திருப் பீடம் வெளியிட்டுள்ளது.

இரண்டாம் வத்திக் கான் சங்கம் நிகழ்ந்ததன் 50ம் ஆண்டு நினைவாக, ஜப்பசி மாதம் 11ம் திகதி வியாழனன்று, புனித பேதுரு பசிலிக்காப் பேரா லய வளாகத்தில் திருத் தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் தலைமையில் நடைபெறும் ஒரு மாபெரும் கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்ப மாகும் விசுவாச ஆண்டு, 2013ம் ஆண்டு நவம்பர் 24ம் திகதி நிறைவுபெறும்.

ஜப்பசி மாதம் 7ம் திகதி முதல் 28ம் திகதி வரை "கிறிஸ்தவ விசு வாசத்தை எடுத்துரைக்க, நற்செய்தி அறிவிப்பில் புதிய வழிகள்" என்ற மையக்கருத்துடன் 13வது ஆயர்கள் சிறப்பு மாமன் றம் வத்திக்கானில் நடை பெறும்.

இந்த மாமன்றத் தில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுடனும், இன் னும் உலகெங்கும் உள்ள கத்தோலிகக ஆயர் பேரவைகளின் தலைவர் களுடனும் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் ஜப்பசி மாதம் 21ம் திகதி இந்த மாபெரும் கூட்டுத் திருப் பலியை நிகழ்த்துவார்.

ஜப்பசி மாதம் 21ம் திகதி ஆறு மறைசாட்சி களை புனிதர் நிலைக் குத் திருததந்தை உயர்த்து வதும், 2013ம் ஆண்டு ஆடி மாதம் 23ம் திகதி முதல் 28ம் திகதி வரை பிரேசில் நாட்டின் ரியோ டி ஜெனிரோ நகரில் நடை பெறும் உலக இளையோர் நாள் நிகழ்ச்சிகளும் இவ் விசுவாச ஆண்டின் உச்சக் கட்டங்களாக அமையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் மறைமாவட்ட மறைவாழ்வுப் பணியாளர்களுக்கான கருத்தமர்வு

மறைக்கல்வி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இந்த ஆண்டிலே 'எல்லோருக்கும் மறைக்கல்வி' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, மறைவாழ்வுப் பணியாளர்க்ளுக்கான கருத்தமர்வு 19.08.2012 - 22.08.2012 வரை மருதமடுத்திருப்பதியிலுள்ள தியான மண்டபத்தில் நடை



பெற்றது. இக்கருத்தமர்வில் நான்கு தமிழ் மறைமாவட்டங்களைச் சேர்ந்த 140 மறைவாழ்வுப் பணியாளர்கள் பங்குபற்றினர்.

தமிழகத்திலிருந்து அருட்பணி. தே. அல்போன்ஸ் அடிகளார் (முனைவர் தமிழ்நாடு திண்டிவனம் முப்பணி நடுநிலைய இயககுனர்) அருட்பணி. செபஸ்தியன் அடிகளார் (முனைவர் தமிழ்நாடு மறைக்கல்வி ஆணைக் குழுவின் செயலாளர்) அருட்பணி. ஜெயபாலன் அடிகளார் (முனைவர் சென்னை மயிலை மறை மாவட்ட சலேசியன் சபைதலைவர்) ஆகிய மூவரும் வளவாளர்களாக இருந்து கருத்தமர்வை நெறிப்படுத்தினார்கள். மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. றெஜினோல்ட் அடிகளாரும், யாழ் மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி. ஜோர்ஜ் அடிகளாரும் உடனிருந்து வழிநடாத்தினர்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்

# விழிப்பாயிருப்போம்...

இன்று எம் சமூகத்தில் தினமும் நடைபெறும் சில நிகழ்வுகள் மனவேதனையையும், எம் சமூகத்தின் எதிர்காலம் பற்றிய பய உணர்வையும் ஏற்படுத்துகின்றன. கறுப்புத் துணியால் முகத்தை மூடி கொட்டன்களுடன் வந்த இளைஞர் குழுவினர் வீட்டை உடைத்து அங்கிருந்த முதியவரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டல்; வீதியால் சென்ற பெண்ணின் சங்கிலி அபகரிப்பு; வீதியால் சென்ற பாடசாலை மாணவியின் கையை மோட்டார் வண்டியில் வந்த இளைஞன் இழுத்தான்; இளம் குடும்பத் தலைவி கணவனால் வெட்டிக் கொலை; இளைஞர்களிடையே நடைபெற்ற குழு மோதலில் நால்வருக்கு வாள்வெட்டு; வீதியில் இளைஞர்களின் அட்டகாசத்தால் வீதியால் பயணிக்க முடியவில்லை; பாடசாலை மாணவி இளைஞனால் பாலியல் வன்புணர்வு; பாலியல் தொழில் புரிந்தவர் அடையாளம் காணப்பட்டார்; குடிவெறியில் வந்த குடும்பத்தலைவன் வீட்டை எரித்தான்; குடித்துவிட்டு கும்மாளம் போட்ட இளைஞர் குழுவால் சமூகப் பொது நிகழ்வு தடைப்பட்டது. போதைப் பொருள் வைத்திருந்த இளைஞர் இருவர் கைது. இவை போன்ற பல தீய செயல்களை அன்றாடம் காண்கின்றோம், கேட்கின்றோம்.

மேற்கூறிய தீய நிகழ்வுகள் எங்கோ தொலைதூரத்தில் நடைபெறுபவை அல்ல மாறாக எம் வீடுகளுக்கு அருகாமையில், நாம் தினமும் பயனிக்கும் வீதிகளில், பணியாற்றும் பணித்தளங்களில் நடப்பவை. இத்தீய நிகழ்வுகளைக் கண்டு கண்களை மூடி மௌனிகளாக இருக்க முடியாது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விழிப்பாக இருக்க வேண்டும். "எந்த நேரத்தில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளருக்குத் தெரிந்திருந்தால் அவர் தம் வீட்டில் கன்னமிட விடமாட்டார்" (லூக்கா 12:39). நாம் விழிப்பாக இருக்கவில்லையென்றால் இத்தீய செயல்கள் எம் வாழ்வில் மிக இலகுவாக நுழைந்து, எம்மிடமுள்ள நற்பண்புகளையும், ஒழுக்க விழுமியங்களையும், ஆன்மீகப் பண்புகளையும் நசுக்கி எம்மை தீச்செயல் செய்ய தூண்டிவிடும். நாம் விழிப்பாக இருக்கின்ற போதுதான் எம்மையும் காத்து எம் பிள்ளைகளையும் நல்வழிப்படுத்தி காத்துக் கொள்ள முடியும். இல்லையெனில் எம் பிள்ளைகளின் எதிர்காலம் இருளாகிவிடும்.

தினமும் நடைபெறும் இத்தீச்செயல்கள் மட்டில் சமூக சமய தலைவர்கள் பாராமுகமாக இருந்துவிடாது இத்தீச்செயல்களை தடுப்பது தமது சமூக கடமையும், பொறுப்பும் என்பதை உணர்ந்து ஒன்றிணைந்து ஆக்கபூர்வமான செயத்திட்டங்களை முன்னெடுக்க முன்வர வேண்டும். சமய தலைவர்கள் ஆலய திருவிழாக்கள், வழிபாடுகளோடு மட்டும் நின்றுவிடாது தம் பணியை அகலப்படுத்தி எதிர்காலத் தலை முறையினர் ஆன்மீகத்திலும், அறிவிலும், ஒழுக்கத்திலும், நற்பண்பிலும் உறுதியுடன் வளர உருவாக்க வேண்டும். நாம் விழிப்பாக இருந்து செயற்பட வில்லையெனில் எம் எதிர்காலத் தலைமுறையினரின் வாழ்வும் இருப்பும் இருளாகிவிடும்.

**அருட்பணி. இ. பெற்றுஸ் தயாபரன்**

ஆசிரியர், "பாதுகாவலன்" கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

Email : editorkavalan@gmail.com

# – அறிந்துகொள்ளுவோம் –

## புனித அகுஸ்தீன்

புனித அகுஸ்தீனார் வட ஆபிரிக்காவில் தகாஸ்தே என்னும் இடத்தில் 354ம் ஆண்டு பிறந்தார். இவர் தமது உயர் கல்வியைக் கற்க இவரின் பெற்றோர் இவரைக் கார்த்தேஜ் நகருக்கு அனுப்பினர். தாய் மோனிக்கா இவரை நல்வழிப்படுத்த எடுத்த முயற்ச்சிகளுக்கு நேர்மாறாக சிற்றின்பத்திலும் மனிக்கேயம் என்ற தப்பறையான கொள்கையிலும் ஊறிப்போயிருந்தார். இவரது தாயின் மன்றாட்டின் வெற்றியால் இவர் மனந்திரும்பினார்.

சிசரோ இலத்தீன் மொழியில் எழுதிய "ஹோர்டென்சியஸ்" என்ற நூலைத் தமது 19 வயதிலேயே ஆவலுடன் கற்றார். அப்போதிருந்தே அவருக்கு உண்மை ஞானத்தைப் பருகிக்கொண்டு இருக்க வேண்டு மென்ற ஆவல் ஏற்பட்டது. இந்நிலையில் மறைநூலையும் கற்றார். ஆனால் அதில் அவ்வளவு ஈடுபாடு ஏற்படவில்லை. தகாஸ்தே, கார்த்தேஜ், உரோமை, மிலான் ஆகிய நகரங்களுக்குச் சென்று உயர்ந்த கலைகளைக் கற்றார். 30ஆவது வயதில் மனிக்கேயத் தப்பறையைச் சிறிது சிறிதாகத் தவறு என்று உணர்ந்தபோதுதான், மிலான் நகரில் புனித அப்புரோசியாரின் அன்பு அரவணைப்புக்குள் வந்து சேர்ந்தார். அவரது இனிய மறையுரை அகுஸ்தினைக் கொஞ்சங் கொஞ்சமாகக் கவர்ந்தது. மறைநூலை மீண்டும் படித்தார். இந்நிலையில் இவர் **"ஆண்டவரே, எனக்குக் கற்பு என்னும் புண்ணியத்தைத் தாரும்: ஆனால் சிறிது காலம் தாழ்த்தி"** என்ற ஒரு வேடிக்கையான மன்றாட்டை எழுப்பியதாக இவரே எழுதி உள்ளார்.

அப்போதுதான் ஒரு நாள் தனது இல்லத்தில் இவர் தனிமையாக அமர்ந்திருந்தார். சிறுவன் ஒருவன் தோன்றி **"எடுத்துப் படி"** என்று மூன்று முறை சொல்லிவிட்டு மறைந்தான். அருகிலிருந்தது மறைநூல். அதை எடுத்தார். படித்தார். "இரவு முடியப்போகிறது: பகல் அண்மையிலுள்ளது. ஆகவே இருளின் ஆட்சிக்குரிய செயல்களைக் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலங்களை அணிந்து கொள்வோமாக" *(உரோ 13 : 12)* என்றபகுதியைப் படித்ததும் எழுந்தார். சிந்தித்தவாறே அம்பரோசியாரைத் தேடிச் சென்றார். அவரின் திருவடிகளில் வீழ்ந்தார். இறைவன் இவரது தீச்செயல்களை மன்னிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். தனது 32ஆவது வயதில் முற்றிலும் மனம் மாறியவராய் திருநீராட்டுப் பெற்றார். 4 ஆண்டுகளுக்குப் பின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். 42ஆவது வயதில் கிபபோ நகரின் ஆயராக உயர்த்தப்பெற்றார். துறவற வாழ்க்கையை விரும்பிய பலரையும் சேர்த்து ஒரு சபையையும் நிறுவினார். **"உன் வாழ்க்கையில், நீ புரியும் செயல்களுக்கு நீயே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நீ புரியும் செயல்களுக்கு அலகையோ அடுத்தவர்களோ பொறுப்பல்லர். எனவே கண்ணியமாக நடந்து உனது ஆன்மாவை இறை உதவியுடன் மீட்டுக்கொள்"** என்பதே அகுஸ்தீன் உலக மக்களுக்குக் கற்றுத்தரும் பாடம். இவரின் திருவிழா ஆவணி மாதம் 28th திகதி கொண்டாடப்படுகின்றது.

# புலோப்பளை பங்கில் மறைக்கல்வி மாணவர்களுக்கான பாசறை



மறைக்கல்வி ஆண்டில் மறைக்கல்வி மாணவர்களின் மறை அறிவினை வளர்க்கும் முகமாகவும், இறைவிசுவாசத்தை ஆழப்படுத்தும் முகமாகவும் கடந்த 21ம் திகதி புலோப்பளை தூய இராயப்பர் ஆலயத்தில் ஒரு நாள் பாசறை நடைபெற்றது. மறைக்கல்வி மாணவர்கள், மறை ஆசிரியர்கள் அனைவரும் ஆலய முன்றலில் ஒன்றுகூடி, பங்குத்தந்தை அருட்பணி. ஜேம்ஸ்நாதனால் மறைக்கல்வி கொடி ஏற்றப்பட்டு பாசறை நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து வழிகாட்டல் தியானமும் கருத்தரைகளும் குழுச்செயற்பாடுகளும், விளையாட்டுக்களும் விழுமிய திரைப்படக் காட்சியும் மறைக்கல்வி போட்டி பரீட்சைகளும் நடைபெற்று பரிசில்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்வானது பங்கில் உள்ள சகல மறைக்கல்வி மாணவர்களின் மறை அறிவை வளப்படுத்தியதுடன் ஒன்றிப்பையும், மறைக்கல்வியின் ஈடுபாட்டையும் அதிகரிக்கச் செய்தது. இந்நிகழ்வில் சுமார் 120 மாணவர்கள் பங்குபற்றினர்.

மறைஆசிரியர் - றெஜினா

போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம்

**தூய வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னையின் சிற்றாலய திருவிழா**



27-09-2012 (பி.ப 4.30) - கொடியேற்றம், திருப்பலி
28-09-2012 (பி.ப. 4.30) - திருப்பலி
29-09-2012 (பி.ப. 4.30) - திருப்பலியும். நற்கருணை வழிபாடும்
30-09-2012 (7.15 காலை) - திருநாள் திருப்பலி

தாதியர் பயிற்சிக் கல்லூரி வாசலின் ஊடாக பக்தர்கள் திருவிழாவில் பங்குபற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**அன்னையின் ஆசீர் பெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.**

**அருட்பணி. யோண் பற்றிக் அ.ம.தி - ஆன்மகுரு**

# திருமணத்தின் புனிதத்தன்மை குறித்து ஸ்கொட்லாந்து ஆயர்களின் அறிக்கை

திருமணம் என்பதற்குப் புது விளக்கம் கொடுக்கவும், ஒரே பாலினத் திருமணங்களைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கவும் ஸ்கொட்லாந்து அரசு எடுத்து வரும் முயற்சிகள் குறித்து தங்கள் மேய்ப்புப் பணி சுற்றறிக்கையில் கவலையை வெளியிட்டுள்ளனர் அந்நாட்டு ஆயர்கள்.

திருமணத்தின் உண்மைத்தன்மை பாதிக்கப்படும்போது அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு திரு அவைக்கு உள்ளது என உரைத்துள்ள ஆயர்கள், திருமணத்திற்கு ஆதரவளிக்கும் மற்றும் திருமணத்திற்கான மேய்ப்புப்பணி குறித்த புதிய வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளனர்.

திருமணம் மற்றும் குடும்பத்திற்கென புதிய அவை ஒன்றை உருவாக்கியுள்ள ஆயர்கள் திருமணத்திற்குப் புதிய அர்த்தங்கள் கொடுக்கும் அரசின் முயற்சிகளுக்கு எதிராக தம் மேய்ப்புப் பணி சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

# திருவுளச் சபையின் புதிய குரு, திருத் தொண்டர்கள்




திருவுளச் சபையைச் சேர்ந்த புலோப்பளைப் பங்கின் இத்தாவில் தூய பார்பரம்மா ஆலயத்தை சேர்ந்த திருத்தொண்டர் வரப்பிரகாசம் அலன் குருவாகவும், அதே சபையைச் சேர்ந்த கேரள (இந்தியா) நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் ப.செ.ஜோசப் பணாக்கல், செ. பிரான்சிஸ் சேவியர் திருத்தொண்டர்களாகவும் ஆவணி மாதம் 22ம் திகதி யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் தூய அடைக்கல அன்னை ஆலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டனர். இவர்கள் தமது குருத்துவக் கல்வியை கண்டி தேசிய குருமடத்தில் கற்றனர். இவர் களின் பணிவாழ்வு சிறப் புற இவர்களுக்காக செபிப்போம்.

# திருக்குடும்ப சபையின் அப்போஸ்தலிக்க துறவிகள்

1862 இல் யாழ் மண்ணில் திருக்குடும்ப சபைச்சகோதரிகள் தாம் தடம் பதித்த 150ஆவது, ஆண்டை நன்றி நிறை இதயங்களுடன் நினைவுகூர்ந்து தம் சபைபற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் எழுதும் தொடர் கட்டுரை.

- ஆசிரியர் -

இலங்கையில் இருந்து முதல் பெண் துறவிகளை திருச்சபைகு அளித்த பெருமை யாழ்ப்பாணத்தை சாரும். முதல் பெண் துறவிகளை மேலைத் தேசத்திலிருந்து பணிக்கு அழைத்த சிறப்பு யாழ்ப்பாணத்திற்குரியதே. 1862ம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் 2ம் நாள் யாழ்த்திருச்சபை வரலாறறிலே ஒரு பொன்னாள். அன்று நகரமெங்கும் விழாக்கோலம். தமிழ் மணம் கமழ நாதகீத, தவில், வாத்திய மேள தாளங்களுடன் கடல் கடந்து வந்த ஐரோப்பிய கன்னியரை யாழ் மக்கள் தமது பண்பாட்டில் வரவேற்றனர். இதைக் கண்டு வியந்த கன்னியர் இக்காட்சியைத் தம் எழுத்தில் வடித்துள்ளனர். அப்போது யாழ் ஆயராக விளங்கிய சமேரியா அ.ம.தி ஆண்டகை அவாகள் தமது மக்கள், சிறப்பாக இளைஞர்கள் அறிவுத் துறையிலும், ஒழுக்க நெறிகளிலும் உயர்ந்தோராக வேண்டுமென்று ஆவல் கொண்டார். கல்வித் துறைகளில் சிறந்து விளங்கவும், அநாதைகள் நலிவுற்றோருக்கு புகலிடமாக விளங்கவும், நோயாளரைப் பராமரிக்கவும், விசுவாசவாழ்வை வளப்படுத்தவும், அர்ப்பணிப்புள்ள துறவற சகோதரிகளின் பணியை வேண்டி நின்றார். எமது சபை நிறுவுனர் பீற்றர் பியன்வெனு நோஆய் அடிகளாரின் இறுதிக் காலத்தில் 1858ம் ஆண்டு அமலமரித்தியாகிகள் சபையின் நிறுவுனர் ஆயர் யூஜின் டீ மசனட் ஆண்டகையுடன் கலந்தாலோசித்து இரு சபைகளுக்கிடையிலும ஓர் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டார். இதனால திருக்குடும்ப சபையினர் இலங்கையின் வட பகுதியில் பணியாற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. இரு நிறுவுனர்களும் 1861ம் ஆண்டு மாசி 8ம் நாள், வைகாசி 21ம் நாள் இறைபதம் அடைந்து விட்டனர். சமேரியா ஆண்டகை தமது சபை நிறுவுனரின் இறுதிச் சடங்கில் பங்குபற்றி யாழ் திரும்பும் போது அழைப்புப் பெற்ற ஆறு சகோதரிகளையும் தம்முடன் அழைத்து வந்தாா. இந்த ஐரோப்பிய சகோதரிகள் எம்மணணில் கால் பதித்த 150ஆவது வருடத்தில் அவர்களால் உருவாகப் பெற்ற நாம் எமது வாழ்வையும் பணியையும் மீட்டுப் பார்த்தல் மிகவும் பொருத்தமானதாகும் இறைவனுக்கு மாத்திரமே மகிமை என்ற ஆன்மீகத்தையும் சிதறுண்ட மக்கள் மத்தியிலே ஐக்கியத்தை கட்டி எழுப்புவதையும் நோக்கமாக கொண்டு வாழ்கின்ற இவர்கள் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பெண்கள் கல்வியில், அவர்களின் உருவாக்கத்தில், தம்மை முழுமையாக அர்ப்பணித்து வருகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த கல்விப் பணியானது இன்று இலங்கையின் பல பாகங்களிலும் வியாபித்து ஒரு விருட்சமாக திருக்குடும்பத்தின் மடியில் இளைப்பாறுகின்ற பல வீரப் பெண்களை, குடுமபங்களை, உருவாக்கியிருக்கின்றது. கல்விப்பணி மட்டுமல்ல காலத்தின் அறிகுறியை உணர்ந்தும் எதற்கும் தயாரான மனநிலையில் செயற்படும் இவர்கள் காடுகளை களனியாக்கி, நகரமாக்கி, கல்வியின் வாசனையை எட்டுத்திக்கிலும் மணம் வீசச்செய்யும் பெருமைக்குரிய சகோதரிகளாக இன்று பாராட்டப்படுகின்றனர். எம் மண்ணில் தோன்றிய அரசியல், பொருளாதார, நெருக்கடிகளுக்கு மத்தியில் இவர்கள் மக்களோடு மக்களாக வாழ்கின்றார்கள். தொடர்ச்சியான 30 வருடப்போரின் இறுதியில் மக்களின் இடப்பெயர்வில், எரிகுண்டுகள், கொத்துக் குண்டுகள், ஷெல வீச்சுக்களுக்கு மத்தியில் மரணத்தின் விளிம்பில் குருதி தோய்ந்த மண்ணில் நாம் மக்களோடு மக்களாக வாழ்ந்தோம. எல்லாவிதமான இடப்பெயர்வுகளிலும் தமது பணியைத் தொடர்ந்து செய்தார்கள். வைத்தியராக, தாதியாக, மறைக்கல்விப் பணியாளராக, விவசாயிகளாக, அருட்சாதனங்களுக்கு ஆயத்தப்படுத்துபவர்களாக, இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி கொடுப்பவர்களாக, இன்றும் ஏழைகள், அநாதைகள், கைவிடபபட்டோர், மாறறு வலுவுடையோருக்கு வாழ்வு கொடுபபவர்களாக சிறப்பாக திருச்சபையில் பங்குத்தந்தையரோடு இணைந்து பணியாற்றுபவர்களாக தம்மை அர்ப்பணித்து வருகின்றார்கள். இதனால் தேவையுள்ள இடங்களிலெல்லாம் எம் இல்லங்கள் தோன்றின. சாந்த வடிவான மூவொரு கடவுளையும் திருக்குடும்பத்தையும் மாதிரியாகக் கொண்டு வாழும் இவர்களுக்கு வாழ்கின்ற இடங்களில் சிறந்த குடும்பங்களை கட்டி எழுப்புவது சிறப்பான பணியாக இருக்கின்றது. சமுதாயத்தின் அடித்தளமாக இருக்கும் குடும்பங்கள் கோவிலாக இருந்த காலம் மாறி இன்று மானிட விழுமியங்கள், அறநெறி ஒழுக்க கருத்துக்கள் சிதைந்து கொண்டிருககின்ற இநதக காலங்களில் துணிவோடு நின்று குடும்பங்களுக்குள புகுந்து ஆன்மீகப் பலத்தோடு தமது பணியை ஆற்றி வருகினறார்கள். துனபத்தில் துயா துடைதது, கண்ணீரில் கவலை போக்கி, மக்கள் நீண்ட பயணங்கள் நடந்த போதெல்லாம் கழுகு சிறகில் தன் குஞ்சுகளை சுமந்து சென்றது போல் எமது மக்களை சுமந்து சென்ற இனிய நாட்களை மறக்க முடியாது. அத்துடன் 2004ம் ஆண்டு எம் மண்ணில் ஏற்பட்ட ஆழிப்பேரலை (சுனாமி) அழிவினால் ஆயிரக் கணக்காண உயிர்கள் காவு கொள்ளப்பட்ட போதும் மக்களின் இருப்பிடங்கள் இருந்த இடங்கள் தெரியாது நிர்க்கதியாக்கப்பட்ட போதும் எம் சகோதரிகளின் உடனிருப்பு மக்களுக்கு வாழ்வு கொடுத்தது. நாம் புதைத்த உடல்கள் ஆயிரமாயிரம். எம் மடியில் தலை சாய்த்த உள்ளங்கள் எத்தனை எத்தனை. இக் காலத்தில் எம் விடுதிச் சாலைகளில் ஊர் பேர் அறியாத குழந்தைகளை எம்மிடம் ஒப்படைத்த போது நாம் அவர்களை அன்புடன் பராமரித்தோம. ஆரம்பத்திலிருந்தே இன்றுவரை இப்பணி தொடர்கின்றது. இன்று மாற்று வலுவுள்ளோரின பணி எமக்கு ஒரு *சவாலாக இருக்கின்றது. பிறப்பினால் ஊனமுற்றோரை விட இன்று போரின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டோர் அதிகமாக உள்ளனர். இறுதிப் போரின் பின சிந்திக்க முடியாதவர்களாக பெற்றோரால் வெறுக்கப்பட்ட வேண்டப்படாத குழந்தைகளாக* எம் கரங்களில் தரப்படுகின்றார்கள். இவர்களுக்காக எம்மைக் கொடுப்பது இன்று காலத்தின் தேவையாக இருக்கின்றது.





பணி வாழ்விலே இளைஞர்கள் தங்களை இறைவனுக்கு முழுமையாக அர்ப்பணித்து திருச்சபையிலே பணியாற்ற அழைத்தல்களை ஊக்குவித்திருக்கின்றார்கள். இன்று எத்தனையோ குருக்கள், அருட்சகோதரிகள், பல்வேறு சபைகளில் இருந்தாலும் எம்மை நன்றியோடு நினைவுகூர்கின்றார்கள். "நீங்கள் முன்னேறிச் செல்லுங்கள். உங்கள் ஓட்டத்தை தடை செய்வது எதுவுமில்லை." என்ற நிறுவுனின் வார்த்தை எம்மை எப்போதும் உந்தித் தள்ளிக் கொண்டே இருக்கின்றது. இந்த ஆண்டு எமக்கு மட்டுமல்ல இலங்கைத் திருச்சபைக்கும் சிறப்பாக யாழ் திருச்சபைக்கும் ஒரு பொற்காலமாகும். இவ்வாறாக 150ஆவது வருடத்தை நினைவுகூருகின்ற நாம் இறைவன் எம்முடன நடந்து வந்த ஒவ்வொரு படி நிலைகளையும் நினைத்து மகிழவுடன் நன்றி கூறுகின்றோம்.

தகவல்
யூபிலிவிழா அமைப்பாளர்,
[illegible] -ம்ராகான இல்லம்,
யாழ்ப்பாணம்.

(தொடரும்)

## இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 50 ஆண்டுகள் நிறைவையொட்டிய கட்டுரைத் தொடர்

**அருட்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன்**

இன்னும் புதிதாய் மலரும்...

# சங்கத்தின் சிறப்பு

திருச்சபையின் பொதுச்சங்கங்களின் வரலாற்றில் இரண்டாம் வத்திக்கான் சங்கம் பலவிதங்களில் தனித்துவம் கொண்டதாக திகழ்கின்றது.

முதலாவதாக இதில் கலந்து கொண்ட ஆயர்களின் எண்ணிக்கை முந்திய சங்கங்களைவிட மிக அதிகம். முதலாம் வத்திக்கான் சங்கத்தில் 737 ஆயர்கள் கலந்து கொண்டிருந்தனர். இதுவே அதற்கு முந்திய அனைத்துச் சங்கங்களிலும் அதிகமான எண்ணிக்கை. ஆனால் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் 2600க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். இறையியலாளர்கள் வளவாளர்கள் என இச்சங்கத்தில் கலந்து கொண்டோரின் தொகை மூவாயிரத்தைத் தொடுகிறது.

இரண்டாவதாக இச்சங்கம் உலகின் பல பண்பாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் சங்கமாக அமைந்தது. இதற்கு முந்திய சங்கங்களில் ஐரோப்பிய ஆயர்களே மிகப் பெரும்பான்மையினராக இருந்தனர். இந்தச் சங்கத்தில் உலகின் பலபாகங்களிலிருந்தும் பல பண்பாடுகளைப் பிரதிபலிக்கும் சுதேச ஆயர்கள் கலந்து கொண்டனர். ஐரோப்பா – 1089, தென் அமெரிக்கா – 489, வட அமெரிக்கா – 404, ஆசியா – 374, ஆபிரிக்கா – 296, மத்திய அமெரிக்கா – 84, அவுஸ்ரேலியா – 75

மூன்றாவதாக இச்சங்கத்தில் முன்பில்லாத வகையில் பொதுநிலையினரும் கத்தோலிக்கரல்லாத பிற கிறிஸ்தவ சபையினரும் கணிசமான தொகையில் பார்வையாளர்களாக கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தனர். பிறகிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த 63பேர் கலந்து கொண்டனர். இச்சங்கத்தில் கலந்து கொண்ட பொதுநிலையினரின் எண்ணிக்கை 52. இவர்களுள் 29பேர் ஆண்களும் 23பேர் பெண்களும் ஆவர்.

நான்காவதாக இச்சங்கம் தான் வரலாற்றிலே முதன் முதலாக மின்சாரம், தொலைபேசி போன்ற நவின வசதிகளோடு நடைபெற்ற சங்கமாகும். மேலும் இதுவே சங்கம் நடைபெறும் காலத்திலேயே பத்திரிகைகளாலும், சஞ்சிகைகளாலும், வானொலி, தொலைக்காட்சி போன்ற தொடர்பூடகங்களாலும் பரபரப்பாக தொடரப்பட்ட முதல் சங்கமாகும்.

இறுதியாக ஆனால் மிகமுக்கியமான சிறப்பு இச்சங்கம் கூட்டப்பட்ட நோக்கமாகும். இதற்கு முந்திய சங்கங்கள் அனைத்தும் திருச்சபையில் ஏற்பட்ட ஒரு சிக்கலை தீர்க்கவோ அல்லது தவறான கோட்பாடுகளைக் கண்டிக்கவோ கூட்டப்பட்ட சங்கங்களாகும். ஆனால் இச்சங்கம்தான் புதுப்பித்தலை நோக்கமாகக் கொண்டு கூட்டப்பட்ட முதல் சங்கமாகும். சங்கத்தின் பிதாமகர் திருத்தந்தை 23வது யோவான் தமது தொடக்கவுரையில் அறிவுறுத்தியது போல சங்கத்தின் நோக்கம், பிரிவினையின் வேர்களை அகற்றி மனித குலத்தில் ஒற்றுமையையும் அமைதியையும் எட்டுவதாகும்.

இந்த நோக்கு இச்சங்கத்துக்கு ஒரு புதிய திசையைக் கொடுத்தது. சாபங்களோ கண்டனங்களோ இல்லை மாறாக ஒற்றுமை, நன்மை, வளர்ச்சி, அதற்கு திருச்சபை எவ்வாறு பங்களிப்புச் செய்யலாம் என்ற வினா, இறைவனது அரசை அமைக்க திருச்சபை தன்னை எப்படி ஒரு தேர்ந்த கருவியாக்கி கொள்ளலாம் என்ற தேடல், இவையே சங்கத்தை வழிநடத்திய சக்திகளாக அமைந்தன.

பிரபல இறையியலாளர் கார்ல்ரானர் கூறியது போல யெருசலேமில் திருத்தூதர்களின் தலைமையில் கூடிய யெருசலேம் சங்கத்திற்கு அடுத்ததாக திருச்சபையின் இருப்பில் வேரோட்டமான மாற்றத்தை ஏற்படுத்திய சங்கமாக இது காணப்படுகிறது.

அவருடைய அவதானிப்பில் யெருசலேம் சங்கம் யூத பண்பாட்டுப் பிடியிலிருந்த திருச்சபையை கிரேக்க – உரோம பண்பாட்டிற்கு திறந்துவிட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கமோ உரோமைய – ஐரோப்பிய பண்பாட்டின் பிடியிலிருந்த திருச்சபையை உலகத்தின் எல்லாப் பண்பாடுகளுக்குமென திறந்து விட்டது.

மூன்றாம் மிலேனியத்தின் வாசலிலே நிகழ்ந்த இச்சங்கம் மூவாயிரமாம் ஆண்டுகளுக்கான திருச்சபையின் திசைகாட்டி என்றால் அது மிகையாகாது.

# பிறருக்கு உதவ விரைந்தவர்

**"அதன் பின் மரியா புறப்பட்டு, யூதேய மலை நாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார்..."- லூக் 1-39-40**

படிப்போ பட்டமோ பதவியோ பணமோ ஒருவருக்கு வந்துவிட்டால் பிறரைவிடத் தாம் உயர்ந்தவர் எனும் மனப்பாங்கும் நடைமுறையும் எளிதில் அவருக்கு ஏற்பட்டுவிடுவது அன்றாட சமூக வாழ்வில் நாம் அடிக்கடி காணும் மெய்மை. இதனால் பிறர் தமக்குப் பணிந்திருக்கவேண்டும, தனி மரியாதை காட்டவேண்டும், தமக்குப் பணிசெய்து வாழவேண்டும். என அவர் எண்ணவும் எதிர்பார்க்கவும் தொடங்கிவிடுகிறார்.

இன்றைய பட்டதாரிகள், அரசு அலுவலர்கள். அரசியல்வாதிகள் முதலாளிகள் என்பவர்களிடம் மட்டுமல்ல, அருள்பணியாளர்கள், துறவியர், தலைமைப் பொறுப்பு ஏற்கும் பொதுநிலையினர் என்பவர்கள் பலரிடம்கூட இதே பாணியே காணக்கிடக்கிறது.

தங்களது பணமும் படிப்பும் பட்டமும் பதவியும் ஆற்றல்களும் திறமைகளும் முற்றிலும் தம் சுயமுயற்சியால் தாங்கள் பெற்றவை அல்ல: மாறாக பெற்றோர், மற்றோர் பலர் உதவியால் இறைவனே நமக்குத் தந்த கொடைகள் என்பதை அவர்கள் மறந்துவிடுவதே இதற்குக் காரணம்.

இதனால்தான் புனித பவுல் கேட்கிறார் "நீங்கள் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள் எனச்சொன்னவர் யார்? உங்களிடம் உள்ள அனைத்தும் நீங்கள் பெற்றுக் கொண்டவைதானே? பெற்றுக்கொண்டும் பெற்றுக் கொள்ளாததுபோல் பெருமை பாராட்டுவது ஏன்?" *(1 கொரி 4:7)*

நான் அதிகம் படித்தவன், உயர் பதவியில் இருப்பவன், அதிகத் திறமைகள் கொண்டவன், வயதில் பெரியவன் எனும் எண்ணத்தில் பிறர் தமக்குப் பணிந்து, பணிபுரிந்து நடக்க வேண்டும் எனும் மனநிலைக்கு மரியா முற்றிலும் எதிர்மாதிரியாக விளங்குகிறார்.

அவர் இறைவனின் அருள் மிகப்பெற்றவர்: வானவராலேயே வாழ்த்தப் பெற்றவர்: இறைவனின் தாய் ஆகும் இணையற்ற பேற்றினைப் பெற்றவர். ஆனால்அச்சிறப்பு எதனையும் மரியா தற்பெருமைக்கோ தாம் தனி உரிமைகள், சலுகைகள் பெறுவதற்கோ தம் வசதிகளையும் சுகங்களையும் பெருக்கிக் கொள்வதற்கோ காரணம் எனக் கருதவில்லை.

இறைவன் தமக்குத் தந்த உயர்வும் சிறப்பும் தம்மைப் பிறரிடமிருந்து தனிமைப்படுத்தி உயர்த்துவதற்காக அல்ல: மாறாக அது பிறரது உயர்விற்காகவும் வளர்ச்சிக்காகவும் தாம் தொண்டுசெய்வதற்கே எனும் உணர்வும் உறுதிப்பாடும் அவரிடம் இருந்தன.

இதனால்தான் இறைவனையே உதரத்தில் சுமந்திடும் இணையற்ற பேற்றையும் பெருமையையும் அடைந்திருந்தாலும் அவர் முதிர்வயதில் கருவுற்ற ஆறாம் மாதத்தில் இருந்த உறவினர் எலிசபெத்துக்கு உதவிட மலைநாட்டுக்கு விரைந்து செல்கிறார்.

பிறரது தேவையை உணர்ந்ததும் தாமதமோ தயக்கமோ இன்றி உதவ விரையும் மரியாயின் பண்பைக் கானாவூர் திருமண நிகழ்விலும் நாம் தெளிவாகக் காண்கிறோம்.

ஆம், தம்மையே தாம் உயர்த்திக்கொள்வதல்ல உண்மையான உயர்வு; மாறாக, பிறர், குறிப்பாக ஏழை எளியவர் உயர உதவுவதால் இறைவனால் தாம் உயர்த்தப்படுவதே உண்மையான சிறப்பு என அவர் உணர்ந்திருக்கிறார்.

மரியாவின் இந்த மனநிலையும் செயல் பாணியும் நமது வாழ்வுக்குச் சொல்லும் பாடங்கள் பல. பிறரை வாழவைப்பதால்தான் நாமும் உண்மையிலே வாழுகிறோம். அவர்கள் உயர உதவும் போதுதான் நாமும் உண்மையில் உயருகிறோம். மனிதர் பார்வையில் இது தெரியாமல் இருக்கலாம்; ஆனால், இறைவன் பார்வையில் இதுவே உண்மை.

மேலும், நமது படிப்பு, பதவி, திறமைகள் என்பன நமக்குத் தரப்பட்டுள்ளது பிறரிடமிருந்து நம்மை நாம் உயர்த்திக்கொள்வதற்காக அல்ல; மாறாக, அவற்றைப் பயன்படுத்திப் பிறரை உயர வைப்பதற்காகவே.

அவற்றைப் பயன்படுத்தித் தேவையில் இருப்போருக்கு உதவும்போதுதான் நாம் உண்மையிலேயே இறைவனுக்கே பணி செய்த பெருமையைப் பெறுகிறோம். "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்தவையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்" *(மத் 25:40);* எனவே "உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக்கொள்ளுங்கள்" *(மத் 25:34)* என இறைவன் நமக்குத் தருவதே உண்மையான உயர்வு, நிலையான, நிறைவான மாட்சிமை.

## விண்ணக வாழ்வில்... நான்கு ஆண்டுகள்



அருட்சகோதரி
மேரி லூசிலா (HF)

பிறப்பு 22-12-1919 | இறப்பு 05-09-2008

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

**"அர்ப்பண வாழ்வில் 60 ஆண்டுகளையும், இவ்வுலக வாழ்வில் 90 ஆண்டுகளையும், கல்வி கற்பித்தலில் 50 ஆண்டுகளையும் முன் மாதிரியாய் கொண்டு விசுவாச வாழ்வில் நிலைத்து இன்று விண்ணக வாழ்வின் 4ஆம் ஆண்டை அடையும் எம் இனிய சகோதரியே என்றும் மறவோம் உம் அன்பை, கல்வியை, கண்டிப்பை "நித்தியத்திலும் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்."**

ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலிகள் அருள் ஆச்சிரமம - காலை 6 மணி, தூய அந்தோனியார் ஆலயம் பாசையூர் - காலை 6 மணி, தூய மரியன்னை பேராலயம் யாழ் - காலை 6 மணி ஆகிய இடங்களில் ஒப்புக்கொடுக்கப்படும்.

குடும்பத்தினர், உறவினர்கள்.

# அர்ப்பணிப்போடு வாழ்ந்த அருள்தந்தை மேரி யோசப்

**அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்**



அருள்தந்தை மேரி யோசப் அடிகளார் இம்மாதம் (புரட்டாதி) 1ம் திகதி தன் குருத்துவ வாழ்வின் பொன்விழாவைக் கொண்டாடுகின்றார். அவரது குருத்துவ வாழ்வும் ஆளுமையும் குருக்கள் நமக்கு ஒரு எடுத்துக்காட்டான வாழ்வாக அமைகின்றது என்பதைப் பல குருக்கள் ஏற்றுக்கொள்வர். புனித சவேரியார் குருமடத்தில் இவருக்கு பொன்விழா எடுத்தபோது அதிபர் தன் உரையில் முன்னிறுத்திக் கூறிய விடயம் 'அருட் தந்தை மேரி யோசப் நமக்கு ஒரு முன்மாதிரிகையான குருவானவர் என்பதுதான்.

இவரது வாழ்வில் நமக்கு முன்மாதிரிகையான விடயங்கள் பல இருந்தாலும் இவர் தன் செபவாழ்வுக்குப் பிரமாணிக்கமாய் இருக்கின்றார் என்பது மிக முக்கியமானதாக விளங்குகின்றது. இவர் தவறாது தினமும் நற்கருணை ஆண்டவர் முன் இருந்து செபிப்பதோடு, திருப்புகழ் மாலைச் செபத்தைச் சொல்வதிலும் தவறமாட்டார். இவரது செபவாழ்வு நமக்கு ஒரு முன்மாதிரிகையான வாழ்வென்றே சொல்ல வேண்டும். இவரது குருத்துவ வாழ்வின் அர்ப்பணத்தின் வெற்றிக்குக் காரணம் இவரது செபவாழ்வேயாகும். இவர் குருத்துவத்திற்கு, இயேசுவுக்குத் தன்னை முற்றும் முழுதாக அர்ப்பணித்தவர் என்பதனை இவரது முழுவாழ்வும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

நான் சிறிய குருமடத்தில் சேர்ந்தபோது அவரே நமக்கு அதிபராக இருந்தார். இவர் குருமட மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை அறிவதற்கு நேரம் எடுப்பார். குருமடமாணவர்களின் விளையாட்டு நேரத்திலும் சாப்பாட்டறையிலும் அவர்களை அவதானிப்பார். ஒரு தடவை விளையாட்டு மைதானத்திற்கு வெளியே அவரோடு நின்று கொண்டிருந்தேன். அப்போது சொன்னார். "சாப்பிடுற இடத்திலையும் விளையாடுற இடத்திலையும் ஒரு ஆளினுடை உண்மையான குணத்தை அறிந்து கொள்ளலாம்" என்று. இவரது கருத்தில் ஆழமான உளவியல் உண்மை இருந்ததைப் பின்னார்தான் அறிந்து கொண்டேன்.

அத்தோடு நமது உருவாக்கத்தினை மேம்படுத்தும் நோக்கோடு அன்று அமலமரித்தியாகிகளின் சிறிய குருமட அதிபராக இருந்த அட்றியன் யோசப்பிடம் சென்று பல்வேறு ஆலோசனைகள் பெற்று வருவார். அவர் இசை அமைப்பாளர் என்பதால் அவர் தயாரித்த பாடல்களை நாம் கற்க வேண்டும என்தற்காக நாம் உணவு உண்ணும் நேரத்தில் அவற்றைக் கேட்க வசதி செய்து தந்தார். அன்று நாங்கள் கற்ற பாடல்கள் பல இன்னமும் நம் மனிதில் நிலைத்து நிற்கின்றன. 'என்னிறைவா என்னிறைவை ஆழத்தில் நின்றும்மை அழைக்கின்றோம்!' என்ற பாடல் நாம் சிறிய குருமடத்தில் இருந்த காலத்தில் அவ்வாறு கற்றவைதான்.

குருமட மாணவரில் இருக்க வேண்டிய முக்கிய விடயங்களைப் பறறிப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறுவார். "பத்தி, புத்தி, புஷ்டி" அதாவது குருமட மாணவன் பக்தியுள்ளவராகவும் புத்தியுள்ளவராகவும் உடற்பலம் உள்ளவராகவும் இருக்க வேண்டும். புனித மடுத்தீனார் குருமட வாழ்வில் நமது ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்குப் பல்வேறு தரமான ஆசிரியர்களை ஒழுங்கு செய்து தந்தார். குருமட மாணவர்களுக்குச் சத்துணவு அவசியம் என்பது இவரது கருத்து. எனவே இவர் நமக்கு நல்ல உணவை வழங்கினார். அத்தோடு மாணவர்களின் உடல் நலத்தில் அக்கறையாக இருந்தார். உடல்நலம் குன்றியோர்மீது விசேட அக்கறை கொண்டு கவனித்தார்.

குருக்கள் தம் உடல்நலத்தைத் தாமே கவனத்தில் எடுக்க வேண்டும் என்பது இவரது கருத்து. அதனால் தன் உடல்நலத்தில் இவர் அலட்சியமாக இருப்பதில்லை. நோய்கள் இருந்தாலும் தன்னைப் பாதிக்காதபடி பார்த்துக் கவனம் எடுத்துக்கொள்வார்.

இறையியல் கல்வியைத் தொடர்வதற்குப் புனித பிரான்சிஸ் சவேரியார் குருமடத்தில் நாம் சேர்ந்தபோது நமக்கு விரிவுரையாளராக விளங்கினர். இவரது குருத்துவத்தின் அர்ப்பணத்தை இவரது கற்பித்தல் வெளிப்படுத்தியது. இடம் பெயர்ந்து குருமடம் சென்ற இடமெல்லாம் (உருத்திரபுரம், மடு, பண்டத்தரிப்பு) இவரும் சென்றார். கற்பிப்பதற்குக் குருக்கள் கிடைக்காதபோது தானே அப்பாடங்களையும் கற்பிப்பார். தனக்கு வேலைச்சுமை என்று இவர் என்றும் முறையிட்டது கிடையாது. தான் கற்பிக்கும் பாடத்திற்கு அவசியமானவற்றையும் தேவையானவற்றையும் தேர்ந்தெடுத்து தகுந்த முன்னாயத்தோடு வந்து கற்பிப்பார். பங்குத்தள அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டதாகவே இவரது விரிவுரைகள் அமைந்திருக்கும். அந்த வகையில் இவரது விரிவுரைகள் சிறந்த விரிவுரைகளாக அமைந்திருந்தன.

1995ம் ஆண்டு யாழ். மக்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது இவரும் வெளியேறி, முகமாலையிலிருந்த அருள்தந்தை சவிரிமுத்து (அமதி) அடிகளாரின் தென்னந்தோடத்திலுள்ள ஒரு கட்டடத்தில் இருந்தார். அப்போது நான் முகமாலைப் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அவரைச் சந்திக்கச் சென்றபோது அந்த இடம் அவருக்குப் பல அசௌகரியங்களைக் கொண்டது என்பதைப் புரிந்துகொண்டு என்னோடு முகமாலைப் பங்குமனையில் வந்திருக்குமாறு அழைத்தேன். அதனை ஏற்று என்னோடு வாழ்ந்தார். அங்கு என்னோடு வாழ்ந்த காலத்தை அவருக்கு என் நன்றிக் கடன் செலுத்துவதற்கான காலமாகக் கருதினேன். நான் புனித மடுத்தீனார் சிறிய குருமடததில் உடல் நலம் குன்றியிருந்தபோது என்னை அழைத்துச் சென்று எனக்குத் தானே முட்டைக் கோப்பி தயாரித்துத் தருவார். அவ்வளவிற்கு அவர் குருமட மாணவர்களில் அக்கறை கொண்டவர். கடுமையானவராகத் தோற்றமளித்தாலும் இதயத்தில் இரக்கம் நிறைந்தவர் இவர்.

என்னோடு முகமாலையில் வாழ்ந்தபோது இவருக்கும் எனக்குமிடையேயான உறவு ஆழமடைந்ததை உணர்ந்தேன். எந்த வகையிலும் பங்கு நிர்வாகத்தில் எந்தத் தலையீடும் செய்ததில்லை. அமைதியாக இருப்பார். நான் பிலிப்பைன்ஸ் நாட்டில் மேற்படிப்பு மேற்கொண்டபோது நான் படும் துன்பங்களை அறிந்து எனக்கு ஆறுதல்கூறிக் கடிதம் போடுவார், எனக்காக நிறைச் செபிப்பார்.

முகமாலையில் என்னோடு இருந்தபோது, இராணுவப்

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# மேய்ப்புப்பணிப் பேரவைகளுக்கான விதிகள்

## ஆலய மேய்ப்புப்பணிப் பேரவை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### 9.0 செயற்குழு

### 9.1 அமைப்பு

9.1.1 செயற்குழுவின் தலைவர் பங்குத் தந்தையே.

9.1.2 பேரவைத் தலைவர், செயலர், துணைச் செயலர், பொருளாளர் மற்றும் பேரவையில் உருவாக்கப்படும் பணிக்குழுக்களின் தொடர்பாளர்களும் இணைந்து செயற்குழுவை அமைப்பர்.

9.1.3 ஆலய மேயப்புப்பணிப் பேரவையின் பணிக் காலமே செயற்குழுவின் பணிக் காலம் ஆகும்.

9.1.4 தலைவர் நீங்கலாக, ஒவ்வொரு செயற்குழு உறுப்பினரும் பேரவையில் உள்ள மொத்த உறுப்பினரின் எண்ணிக்கையில் பாதிக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் வாக்குகளை பெற்று செயற்குழுவுக்குத் தெரிவு செய்யப்படுவர்.

9.1.5 பங்கு மக்கள் அனைவருக்கும் பங்குத் தந்தை பொதுவானவர். ஆதலால், ஒருவரையும் சாராதவர் என்பதை எண்பிக்க, செயற்குழு உறுப்பினர் தேர்தலில் அவர் வாக்களிக்கக் கூடாது.

9.1.6 செயற்குழு உறுப்பினர்களுள் அதன் தலைவராகிய பங்குத் தந்தை மட்டுமே நிலையான பணிப் பொறுப்பு வகிப்பார். ஏனையோர் பணிப் பொறுப்பு ஏற்ற நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் பணிப் பொறுப்பில் இருப்பர்.

### 9.2 கூட்டம்

9.2.1 செயற்குழுக் கூட்டம் மாதம் ஒரு முறை நடைபெறும்.

9.2.2 முறையான செயற்குழுக் கூட்டத்திற்கு, குறைந்த பட்சம் அதன் முழு அங்கத்தவர் தொகையில் அரைப் பங்கினராவது வருகை தந்திருத்தல் அவசியம்.

### 10.0 தலைவரின் கடமைகள்

10.1 பங்குத் தந்தையே இக்குழுக்கள் அனைத்திற்கும் தலைவர்.

10.2 பங்குத் தந்தை சபைக் கூட்டங்களையும், செயற்குழு, பணிக் குழுக்களின் கூட்டங்களையும் தலைமை தாங்கி நடத்துவார்.

10.3 செயற்குழுக் கூட்டங்களில் சமபலத்தால், தீர்மானங்கள் எடுக்க முடியாத நிலையில், தலைவர் ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையின் தீர்மானங்களின் தேவைகளை விளக்கி, அவர்களை முடிவெடுக்கும் நிலைக்குத் தூண்டுவார்.

### 11.0 உறுப்பினரின் கடமைகள்

11.1 உறுப்பினர் பிறருக்கு முன்மாதிரியாக வாழ்ந்து, கிறிஸ்தவ அன்பு, பணிவு, தன்னலமற்ற சேவை மனப்பான்மையுடன் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். அவர்கள் அனைத்துத் துறைகளிலும், பங்கின் முன்னேற்றத்திற்காக, தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை பொறுப்புடன் நிறைவேற்ற தமது ஆற்றலையும், திறமைகளையும் பயன்படுத்தி, அர்ப்பணத்துடன் பணிபுரிய வேண்டும்.

11.2 சபைக் கூட்டங்களில் பங்கேற்பது தங்களது தலையாய கடமை என உணர்ந்து, உறுப்பினர் கூட்டங்களுக்குத் தவறாது வருகை தரவேண்டும்.

### 12.0 பணிக் குழுக்கள்

12.1 ஒவ்வொரு ஆலயத்திலும் பின்வரும் ஐந்து அடிப்படைப் பணிக்குழுக்கள் அமைக்கபபடுவது அவசியம்.

12.1.1 திருவழிபாட்டுக் குழு
12.1.2 நற்செய்திக் குழு
12.1.3 மனித நேயப் பணிக் குழு
12.1.4 நிதிக் குழு
12.1.5 கல்விக் குழு

இவற்றைவிட, ஆலயத்தின் தேவைக்கேற்ப மேய்ப்புப் பணிபபேரவையின் தீர்மானப்படி அப் பேரவையே வேறு பணிக்குழுக்களையும் அமைக்கலாம். ஆலயத்தின் நல்வாழ்வுக்காக சமூக மேம்பாட்டுக்குழு, குடும்பநலக் குழு, பெண்கள் மேம்பாட்டுக் குழு, இளைஞர் நலக்குழு, சிறுவர் பராமரிப்புக் குழு, நீதி – சமாதானக் குழு, கலை பண்பாட்டுக் குழு, பல் சமய உரையாடல் குழு, பொது நிலையினர் விழிப்புணரவுக் குழு போன்ற குழுக்களை அமைத்து திறம்பட செயற்படலாம்.

12.2 இப்பணிக்குழுக்களுக்குரிய பிரதிநிதிகளை ஒவ்வொரு வட்டாரம்/ தொகுதி/ அன்பியம் ஆகியவை தெரிவு செய்யும்.

12.3 பணிக் குழுக்களுக்குரிய தொடர்பாளர்களை ஆலய மேய்ப்புப்பணிப் பேரவை தனது உறுப்பினர்கள் மத்தியிலிருந்து சாதாரண பெரும்பான்மை வாக்கு மூலம் தெரிவு செய்யும்.

12.4 ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையின் கீழ் இயங்கும் பணிக்குழுக்களின் பணிக்காலம் ஆலய மேய்ப்புப்பணி பேரவையின பணிக்காலமே.

12.5 இக்குழுக்கள் மாதம் ஒரு முறை கூடி தமது செயல்களைத் திட்டமிடும்.

12.6 குழுவின் தொடர்பாளர் ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையின் பொதுக் கூட்டங்களில் தனது குழு அறிக்கையைச் சமர்ப்பிப்பார்.

### 13.0 நிதிக்குழுவின் கடமைகள்

13.1 மேய்ப்புப்பணிப் பேரவையால் நிர்ணயிக்கப்பட்ட ஒற்றைவகைச் செலவுத் தொகைக்கு மேற்பட்ட தொகையை செலவு செய்ய பங்குத் தந்தை நிதிக் குழுவின் ஒப்புதலை பெறுதல் அவசியம்.

13.1.1 பங்கின் அசையாத சொத்தை விற்பதற்கோ, அன்பளிப்பாகக் கொடுப்பதற்கோ, மாற்றுவதற்கோ பங்குத் தந்தைமேய்ப்புப்பணிப் பேரவையின் ஒப்புதலை பெற்று, ஆயருடைய அனுமதிக்கு விண்ணப்பிக்கக் கடமைப்பட்டுள்ளார்.

13.1.2 நிதிக் குழு எதிர்வரும் ஆண்டுக்கான வரவு – செலவு அறிக்கையைத் தயார் செய்யவேண்டும்.

13.1.3 நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேற்பட்ட செலவுக்கு நிதிக்குழு மேய்ப்புப்பணிப் பேரவையின் ஒப்புதலைப். பெறவேண்டும்.

13.1.4 மேலதிக பணம் பங்குத் தந்தையுடன் செயலர் அல்லது பொருளாளர் கையொப்பம் இடும் வகையில் வங்கியில் வைப்பிலிடப்பட வேண்டும்.

13.1.5 மூன்று மாதங்களுக்கொரு முறை பொருளாளர் கணக்கறிக்கையை பேரவையில் சமர்ப்பிப்பார்.

13.1.6 ஆண்டின் நிதியறிக்கையை மறைமாவட்ட நிதிக் குழுவிடமும் ஆலய மேய்ப்புப்பணிப் பேரவையிடமும் பொருளாளர் சமர்ப்பிப்பார்.

13.1.7 மேய்ப்புப்பணிப் பேரவையின் பொருளாளரே நிதிக்குழுவின் தொடர்பாளராக இருப்பார்.

13.1.8 ஒன்றுக்குமேற்பட்ட ஆலயங்களுக்குப் பொதுவான ஒரு மேய்ப்புப்பணிப் பேரவை இயங்கும் பட்சத்தில், நிதிக்குழு தனித்தனியான ஆலயங்களிலே செயல்படும் பாரம்பரியம் உண்டு. எனவே, அத்தகைய நிதிக்குழுக்களின் பொருளாளர்களும் மேய்ப்புப்பணிப் பேரவைவயின் செயற்குழுவில் தொடர்பாளராக செயற்படுவர். பொதுச் செலவுக்கான நிதியை (*உதாரணம்:* ஒளிவிழா, கருத்தரங்கு, பாசறை, கலைவிழா, மறைக்கல்வி விழா) மேய்ப்புப்பணிப் பேரவையின் தீர்மானப்படி, ஆலய நிதிக்குழுக்கள் பகிர்ந்து கொள்ளும்.

13.1.9 பொதுச் செயற்பாடுகளுக்கான நிதியை செலவு செய்யவும், அறிக்கை சமர்ப்பிக்கவும் மேய்பபுப்பணிப் பேரவை ஒரு பொருளாளரை நியமிக்கும். தனித்தனி ஆலயங்களுக்கான வரவு செலவை அந்தந்த ஆலயங் களுக்குரிய நிதிக்குழு கையாளும்.

### 14.0 நிதி நெறியாள்கை

14.1 ஆலயத்தின் செலவுகளுக்கும் பங்குத் தந்தையின் தாபரிப்புக்கும் வேண்டிய பணத்தை சேகரிப்பது நிதிக்குழுவின் பொறுப்பாகும்.

14.2 உண்டியல் பணத்தில் அரைத் தொகையை மறைமாவட்டத்தின் பொதுநிதிக்கு பங்குத் தந்தை அனுப்பிவைக்க வேண்டும்.

14.3 பங்குக் குருவின் தாபரிப்புப் பணம் உரிய நேரத்தில் போதியளவு செலுத்தப்படாத பட்சத்தில், உண்டியல் பணத்தின் அரைத்தொகையை அவருடைய தாபரிபபுக்கு எடுத்துக் கொள்ள அனுமதியுண்டு. அதற்கான கணக்கினை அவர் நிதிக்குழுவுக்குச் சமர்பபிப்பார்.

### 15.0 ஆயரின் வழிநடத்துதல்

15.1 மேய்ப்புப்பணிப் பேரவையை உருவாக்கவும், வலுப்படுத்தவும், கண்காணிக்கவும் ஆயர் ஓர் அமைப்பை ஏற்படுத்துவார்.

15.2 விதி விளக்கம் பற்றிய எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆயரின் முடிவே இறுதியானது.

(தொடரும்)

## அர்ப்பணிப்போடு... (4ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினை மோசமடையப் போவதான நிலை காணப்பட்டபோது குருமடம் உருத்திரபுரத்திலுள்ள ஆரோபணத்திற்கு நகர்ந்தது. அவர் போகும் போது 'பாதர், உங்களுக்கு நான் என்ன தர? என்று கேட்டேன். 'விரிவுரை எழுதக் கொப்பிகள்தான் தேவை என்றார். அவற்றை வழங்கினேன். வேறு எதையும் இவர் கேட்டதில்லை. எவருக்கும் சுமையாக இருக்கக்கூடாது என்பது இவரது வாழ்வின் கொள்கைகளில் ஒன்று. இவர் ஏழ்மையாகத் தானும் வாழ்ந்ததோடு ஏழைகளையும் அன்பு செய்தார். ஏழைகளுக்கு உதவ இவர் பின்னிற்பதில்லை, சினப்பதில்லை. அவர்களுடைய குறைகளைக் கேட்டு உதவிபுரிவார்.

தன் உடல் நலமின்மையுடனும் ஆண்டவரின் பணிக்குக் குருக்களை ஆயத்தப்படுத்துவதில் என்றும அக்கறையாக இருந்தார். தன் வேலைப்பளுக்கள் மத்தியிலும் சிறிய குருமட மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதை முக்கிய பணியாகக் கருதினார். இவர் எம்மீது எப்போதும் அக்கறை காட்டுவதால் இவரிடம் கற்ற மாணவர்கள் நமக்குள் அவரைப் பற்றிப் பேசும்போது பாசமாக, "மேரிப் பப்பா" என்றே கதைப்போம்.

இவர் எளிமையான வாழ்க்கை முறை கொண்டவர். மிக அவசியமானவற்றைத் தவிர வேறு எதையும் இவரது அறையில் நாங்கள் காண்பதில்லை. தன் பழைய சயிக்கிளிலேயே பல வருடங்களாகப் பயணம் செய்வார்.

திருமுழுக்கு யோவான் போன்ற துணிச்சல் உள்ளவர். யாராக இருந்தாலும் தவறானதைச் சொன்னால் அல்லது செய்தால் கண்டிக்கத் தயங்கமாட்டார்.

அன்புத் தந்தை மேரியோசப் இறைவன் யாழ்மறைமாவட்டத்திற்குத் தந்த உன்னத கொடை. இவர் நீண்ட காலம் வாழ்ந்து இறைபணியாற் ஆசிக்கின்றேன். எமது பாசத்தந்தைக்கு எம் அன்பு நிறை யூபிலி வாழ்த்துகள் உரித்தாகட்டும்!

## திருத்தந்தையின் லெபனான் நாட்டுப் பயணம்



லெபனான் நாட்டுக்குத் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் புரட்டாதி மாதம் 14ம் திகதி முதல் 16ம் திகதி வரை மேற்கொள்ளும் மேய்ப்புப்பணி பயணம் அந்நாட்டில் உள்ள கத்தோலிக்கர்களுக்கு மட்டுமல்லமாறாக, லெபனானில் உள்ள அனைத்து மக்களுக்காகவும் மேற்கொள்ளப்படும் ஒரு பயணம் என்று திருத்தந்தையின் பயணத்திற்கான முன்னேற்பாடுகளை ஒருங்கிணைக்கும் ஆயர் கமில்லேசைடன் செய்தியாளர்களிடம் கூறியுள்ளாா.

லெபனான் நாட்டு ஆயர்கள் மட்டுமன்றி, அந்நாட்டுத் தலைவரும் திருத்தந்தைக்கு அழைப்பு விடுத்துள்ளதைச் சுட்டிக்காட்டிய ஆயர் சைடன் நாட்டின் உயர் அதிகாரிகள் வத்திக்கானுடன் நேரடித் தொடர்பில் உள்ளனர் என்றும் எடுத்துரைத்தார்.

லெபனான் நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் திருத்தந்தையின் வருகை வசந்தத்தின் வருகையைப்போல் இருக்கும் என்ற தன் நம்பிக்கையை ஆயர் சைடன் நிருபர்கள் கூட்டத்தில் வெளிப்படுத்தினார்.

திருத்தந்தையின் லெபனான் பயணம் குறித்து ஊடகங்களில் அண்மையில் வெளியாகிவரும் வதந்திகளைப் பொருட்படுத்தமல், லெபனானில் அவர் வருகை குறித்து எதிர்பாராத அளவு ஆர்வம் உருவாகியுள்ளதென பயண ஏற்பாடுகளைக் கண்காணிக்கும் அருள்தந்தையும் செய்தியாளர்களிடம் கூறினார்.

## மண்டைதீவு தூய. பேதுருவானவர் ஆலய திருவிழா

எம் பாதுகாவலரின் திருவிழா இம்முறை வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. 1990களின் பின் எம் கிராமத்தில் ஏற்பட்ட இடம்பெயர்வுகள், யுத்தம் காரணமாக நீண்ட காலமாக புனருத்தாரணம் செய்யப்படாமல் இருந்த எம் ஆலயம் எம் பங்குத் தந்தையும் ஆயரின் செயலருமாகிய அருட்பணி. விஜின்ரஸ் எம் பங்குவாழ மக்களினதும் அடிகளாரின் வழிகாட்டலிலும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எம் பங்கு மக்களினதும் தாராள உதவியால் இவ் ஆண்டு புனருத்தாரணம் செய்யப்பட்டு திருநாள் திருப்பலி எம் ஆயர் அதி. வந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஒப்புக் கொடுக்கப்பட்டு அவரால் எம் ஆலயம் ஆசீர்வதிக்கபபட்டமை பஙகு மக்களாகிய எமக்கு மகிழ்வை தந்த விடயமாகும்.

23-07-2012 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 01-08-2012 அன்று ஆயர் தலைமையில் விழா திருப்பலியும் பின்னர் வழமை போன்று சிறப்பாக எம் புனிதரின் திருச்சொருப பவனியும் ஆசீரும் இடம்பெற்றது.

நீ. சூசைதாஸ்
ஆலய. நிர்வாக செயலர்.

## எட்டு வருடங்களின் பின் முல்லைத்தீவு கப்பலேந்தி மாதா ஆலய திருவிழா

கப்பலேந்தி மாதா ஆலய திருவிழா முல்லைத்தீவு கப்பலேந்தி மாதா ஆலயம் சுனாமி பேரலையினால் சிதைவடைந்தது. அதன் பின் எமது நாட்டில் ஏற்பட்ட போரின் காரணமாக அப்பகுதியினது மக்கள் நடமாட்டம் குறைந்த பிரதேசமாக காணப்பட்டது. நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையில் இருந்த இவ் ஆலயத்திற்கு அருகாமையில் இவ் ஆலய மக்களினதும் பங்குத் தந்தையர்களின் ஒத்துழைப்பினாலும் சிற்றாலயம் அண்மையில் அமைக்கப்பட்டு திருநாள் கொண்டாடப்பட்டது.


## தீவு மறைக்கோட்ட இளையோர்க்கான தலைமைத்துவப் பயிற்சி

தீவு மறைக்கோட்ட இளையோர்க்கான தலைமைத்துவப் பயிற்சி சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் கடந்த 31ம், 1ம் திகதிகளில் நடைபெற்றது. தீவு மறைக்கோட்ட பங்குகளின் இளையோர் ஒன்றியப் பிரதிநிதிகள் 30ற்கும் மேற்பட்டோர் பங்கெடுத்தனர். இப்பயிற்சி யாழ். மறைமாவட்ட இளையோர் ஒன்றிய இளம் வளவாளர்களால் நெறிப்படுத்தப்பட்டது. இப்பயிற்சியை அருட்பணி. G. பீற்றர் சிறப்புற ஒழுங்குபடுத்தினார்.

## தமிழ் மறைமாவட்ட.....(1ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் நாள் மாலை அருட்பணி. றெஜினோல்ட் அடிகளாரின் வரவேற்புரையும், அத்துடன் மறைவாழ்வுப்பணியாளர்களின் கடமைகளும், பொறுப்புக்களும், இக்கருத்தமர்வில் பங்குகொள்ள வேண்டிய விதிமுறைகள் பற்றியும் அடிகளாரால் எடுத்துரைக்கப் பட்டது. வளவாளர்களும் அறிமுகப்படுத்தப்பட்டார்கள்.

இரண்டாம் நாள் காலை யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மறைவாழ்வுப்பணியாளர்கள் காலை வழிபாட்டை முன்னின்று நெறிப்படுத்தினார்கள். தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்களின் தலைமையில் திருப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. முதலாவதாக 'இன்றைய சூழ் அமைவும் - மறைக்கல்வி பதில மொழியின் அவசியமும் பற்றியும், அன்றைய நாளின் இறுதியில் மறைக்கல்வி என்பது வாழ்வின் அனுபவம்'' என்பது பற்றியும் அருட்பணி. செபஸ்தியன் அடிகள மிகவும் தெளிவான முறையில் விளக்கிக் கூறினார். தொடர்ந்து அருட்பணி. அல்போன்ஸ் அடிகளார் 'இயேசுவே மேலான ஆசிரியர்' என்பது பற்றியும், அருட்பணி. ஜெயபாலன் அடிகளார் 'ஒருங்கிணைந்த மறைக்கல்வி' பற்றியும் தமது வாழ்வின் அனுபவங்களோடு எடுத்தியம்பினர்.



மூன்றாம் நாள் மனனார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மறைவாழ்வுப் பணியாளர்களின் நெறிப்படுத்துதலில் காலை வழிபாடு நடைபெற்றது. தொடர்ந்து யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம அடிகளாரின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது. மூன்றாம் நாள் நிகழ்வாக 'மறைக்கல்வியின் பொருள், பணி, நோக்கம் என்பது பற்றி அருட்பணி. அல்போன்ஸ் அடிகளாரும், ஒருங்கிணைந்த மறைக்கல்வி - திருவிவிலியம் பற்றி அருட்பணி. ஜெயபாலன் அடிகளாரும், அன்பியவழி மறைக்கல்வி பற்றி அருட்பணி. அல்போன்ஸ் அடிகளாரும் உரையாற்றினர்.

நான்காவது நாள் காலை வழிபாட்டை திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டங்களைச் சேர்ந்த மறைவாழ்வுப் பணியாளர்கள் நெறிப்படுத்தினார்கள். தொடர்ந்து 'மறைபோதகப் பணியே திருச்சபையின் தலையாயபணி' என்பது பற்றி அருட்பணி. செபஸ்தியன் அடிகளாரும், மறைக் கல்வியின் முக்கிய பரிமாணங்கள்' பற்றி அருட்பணி. அல்போன்ஸ் அடிகளாரும் 'ஒருங்கிணைந்த மறைக் கல்வி - திருவிவிலியம் பற்றி அருட்பணி. ஜெயபாலன் அடிகளாரும் சிறப்பான முறையில் விளக்கிக் கூறினார்கள்.

இறுதியில் மருதமடு மாதா ஆலயத்தில் மட்டக் களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு யோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் திருபபலி ஒபபுக்கொடுக்கபபட்டது. இறுதியில் மதிய உணவுடன் மறைவாழ்வுப் பணியாளரின் கருத்தமர்வு இனிதே நிறை வெய்தியது.

சு. அன்ரனிப்பிள்ளை
மறைஆசிரியர் - யாழ்பபாணம்

## தமிழ் கத்தோலிக்க செய்திலங்கா தொலைக்காட்சி (TCNL TV)

ஆயர் தீயோகு நினைவு கிண்ண நாட்டுக் கூத்துப் போட்டி ஒன்று முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் முறையே 25ஆயிரம், 15ஆயிரம், 10 ஆயிரம் பணப் பரிசு பெறுவர்.

சிறந்த கூத்துக்கள் TCNL தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படும் இறுவட்டுக்களாக வெளியிடப்படும். நூல் வடிவிலும் வெளியிடப்படும் கூத்துக்கள் கத்தோலிக்க திருச்சபையின் புனிதர்களின் வரிசையில் சாட்சிய வாழ்வு வாழ்ந்த பின்வரும் புனிதர்களின் வாழ்வையும் பணியையும் பிரதிப்பலிப்பதாக அமைதல் வேண்டும்.

1. புனித மாட்டீன் போரஸ்
2. புனித மக்சிமில்லியன் கொல்பே
3. புனித மரிய கொறற்றி (1890-1902)
4. புனித பீற்றர் கிளாவர்
5. புனித அருளானந்தர்
6. புனித கொன்சாலோ கார்சியா (1557 - 1597)
7. புனித தாமஸ்மூர்
8. புனித ஜோண் பிசர்
9. புனித யூடித் ஸ்டைன் (1891 - 1942)

### விதிகள்

1. நாட்டுக்கூத்து தென்மோடி வகையைச் சேர்ந்ததாக இருத்தல்.

2. திருமணமாகாத இளைஞர் யுவதிகளை கொண்ட எந்த அமைப்போ, பாடசாலை மட்ட குழுவோ, பங்கு ரீதியான அமைப்போ, தனிப்பட்ட குழுக்களோ பங்குபற்றலாம்.

3. 1 மணி 30 நிமிடத்திற்கு மேற்படாமல் கூத்து அமைதல்.

4. கூத்தை தெரிவு செய்வதற்கு பங்குத் தந்தையின் அனுமதியுடன் பிசப்சவுந்தரம் மீடியா சென்ரர் உடன் தொடர்பு கொள்ளவும். தெரிவு செய்யும் கூத்தின் கதைச்சுருக்கம் தரப்படும். கூத்து தெரிவு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் நாட்டுக்கூத்து பிரதிகள் முழுமையாக ஒருவரால் பாடிப்பதியப்பட்ட ஒளித் தட்டுடன் அனுமதி பெறவேண்டும். டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும். விதிகள் மீறும் கூத்துக்கள் நீக்கப்படும் நடுவர் தீர்ப்பே இறுதியானது.

மேலும் பல போட்டிகள் பற்றிய விபரம் பின்னர் தரப்படும்.

*அருட்பணி. றூபன் மரியாம்பிள்ளை*
*பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் - TCNL TV*
*இல. 891 ஆசுப்பத்திரி வீதி - யாழ்ப்பாணம். 021 222 6085*


## 17 வருடங்களுக்குப் பின்பு கிளாலி புனித கண்மணி மாதா ஆலயத்தில் வருடாந்த திருவிழா திருப்பலிக் கொண்டாட்டம்

06.8.2012 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நவநாள் வழிபாடுகள் திருப்பலியுடன் கொண்டாடப்பட்டு 15.08.2021 அன்று அருள்தந்தை ஜெறோ செல்வநாயகம் அடிகளார் தலைமையில் திருவிழா கொண்டாடப்பட்டது. இப்பகுதி மக்கள் நாட்டில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக இடம் பெயர்ந்து தற்போது 15 வருடங்களுக்குப் பின்பு மீள் குடியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆலயம் முற்றாக சேதமாக்கப்பட்டிருந்தாலும் அம்மக்களின் அயராத உழைப்பாலும் உதவியாலும் புனரமைக்கப்பட்டு அந்த ஆலயத்தில் பங்குத்தந்தை ம. பத்திநாதர் தலைமையில் இவ்வருடம் வழமைபோல் திருவிழாத் திருப்பலி சிறப்பாக கொண்டாடப் பட்டது. வீடுகளை நாம் இழந்திருந்தாலும் எம் விசுவாசத்தை நாம் இழக்கவில்லை என்பது இந்த ஆலயத்தை புனரமைத்ததிலிருந்து தென்படுகின்றது.

அன்னையின் வழிகாட்டலில் ஆண்டவர் இயேசுவில் அழியாத விசுவாசம் வைத்து வாழ்வில் என்றும் நாம் வீறுநடை போடவேண்டும். ஒரு தாய் எவ்வாறு தன் பிள்ளையின் அருகில் இருந்து பாதுகாத்து வழிநடத்துகின்றாளோ அதேபோல் அன்னை மரியாவும் எம்மருகில் இருந்து அரவணைத்து எமக்காக இறைவனிடம் பரிந்து பேசிக்கொண்டே இருக்கின்றார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என அருட்பணி. ஜெறோ அடிகளார் தனது மறையுரையில் வலியுறுத்தினார்.

## மண்ணித்தலை புனித செபஸ்ரியார் யாத்திரைத்தல திருவிழா

திருவிழாவினை முன்னிட்ட ஆவணி மாதம் 22ம் திகதி தொடங்கி நான்கு நாள் ஆயத்த வழிபாடுகள் நடைபெற்றன. 25ம் திகதி நற்கருணை விழா கிளி - முல்லை மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி. A.J. யாவிஸ் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.



26ம் திகதி திருவிழா திருப்பலி யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது. போர்த்தளபதியான புனித செபஸ்ரியார் தம் உயர்நிலை பதவிகளைத் துறந்து யேசுவுக்கு விசுவாச சாட்சியம் பகர்ந்து வாழ வேண்டும் என அருட்தந்தை அவர்கள் தம் மறையுரையில் தெரிவித்தார். இத்திருவிழாவில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கெடுத்தனர். யாழ் குடாநாட்டிலிருந்து குறிப்பாக பாசையூரிலிருந்து பெரும் தொகையான மக்களும், பூனகரி பிரதேச மக்களும் இத்திருவிழாவிற்கு வருகை தந்தனர். இத்திருவிழா பூனகரிப் பங்குத்தந்தை B.J.A. பிறாயன் அடிகளாரின் வழிகாட்டலில் சிறப்பாக நடைபெற்றது.

# மீளவும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்

இன்று தினசரிகளை படிக்கின்றபோது நல்ல செய்திகள் கிடைப்பதில்லை. வன்முறைகளும், வன்புணர்வுகளும் நிறைந்த ஒரு சமூகத்தில் வாழுகின்றோம் என்ற உணர்வே பத்திரிகைகளை படிக்கின்றபோது எழுகின்றது. இத்தகைய ஒழுக்க நெறி பிறழ்வுகள் ஒரு ஆரோக்கியமற்ற சமூகப் போக்கிற்கு கட்டியம் கூறுவதாகவே அமைகின்றது. கட்டுப்பாடற்ற ஒரு கடிவாளமற்ற ஒரு காட்டுச் சுதந்திரத்தை பிரதிபலிப்பதாகவே எமது சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. மதங்கள் இருந்தும், மதத்தின் செல்வாக்கு மனிதர்களில் சரிந்து போகின்ற நிலையையே கண்கூடாக் காணுகின்றோம். இத்தகைய நிலையை எப்படி அணுகுவது என்பது ஒரு சவாலாகவே கருதப்படுகின்றது. மதங்கள் பக்திமயப்படுத்தப்பட்ட ஒரு ஆன்மீகத்தை வளர்க்க முற்பட்டதேயொழிய, ஆழமான வாழ்வை தொடுகின்ற ஆன்மீகத்திற்கு இட்டுச் செல்லவில்லை என்றே கூறலாம்.

### இன்றைய ஆன்மீகத்தின நிலை

இன்றைய ஆன்மீகம் மேலோட்டமான கூறுகளையே கொண்டுள்ளது எனக்கூறலாம். குறிப்பாக இன்று எமது பகுதிகளில் பார்த்தால் ஆலயங்கள் புதிதாக கட்டப்படுவதும், அழகுபடுத்தப்படுவதும் தான் பெரும்பாலும் நடக்கின்றது. சந்திக்கு சந்தி ஆலயங்களும், கோவில்களும், திருச்சுருபங்களும் வைத்து அழகு பார்பபதில் தான் மதங்கள் இன்று அடையாளப்படுத்தப்படும் நிலை தோன்றியுள்ளது. ஆனால் மனிதர்களின் வாழ்க்கையோ மதங்கள் கூறும் போதனைகளின்படி அமைவதாக இல்லை என்பதை பொதுவாகக் கூறலாம். ஆலய வழிபாடுகள், கோவில் திருவிழாக்களை ஆடம்பரமாக கொண்டாடுதல், ஆன்மீக வாழ்வை அறவே தொடாத பாரம்பரியங்களை பாதுகாத்தல் போனறவையே மதத்தின் பெயரால் இன்று நடாத்தப்படுகின்றன. ஆலயக் கடமைகளை நிறை வேற்றுதல் என்ற வட்டத்திற்குள் ஆன்மீகம் இன்று முடங்கிக் கிடக்கின்றது. இத்தகைய நிலையினால் மனிதர்களுடைய வாழ்வின் செயற்பாடுகள் ஆரோக்கியமானதாக இல்லை. சமூகத்தில் இன்றும் பிளவுகளும், போட்டி பொறாமைகள், நல்லிணக்கமின்மை மதத்தின் பெயரால் நடக்கின்றன. அத்துடன் வாழ்க்கை நற்செய்தியாக அமைய முடியாத நிலையை காணுகின்றோம்.

### வாழ்க்கை நற்செய்தி மாற்றம் பெற வேண்டும்.

விவிலிய பின்புலத்தில், நற்செய்தி என்பது ஒரு அரசனுக்கு வாரிசாக ஒரு ஆண்குழந்தை பிறந்துள்ளது என்பது நற்செய்தியாக பறைசாற்றப்படும். எல்லோரும் அதனை மகிழ்ச்சியாக வரவேற்று கொண்டாடுவார்கள். அதேபோன்று புதிய ஏறபாட்டில், இயேசுக் கிறிஸ்து வழியாக கிடைத்த மீட்பே நற்செய்தியாக பறைசாற்றப்படுகின்றது. ஒருவிதத்தில் மக்களின் ''விடுதலை'' எனப்பொருள்படும். எல்லா மதங்களுமே மக்களின் வாழ்க்கை அடுத்தவருக்கு நற்செய்தியாக விளங்கவேண்டும் என்றே போதிக்கின்றது. ஆனால் மனித இதயங்களில் மதக்கோட்பாடுகளும், போதனைகளும் நல்வாழ்விற்கான செய்திகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. இதனால் சமூகங்களில் இன்று கலாச்சார சீரழிவுகளும், வன்முறைகளும், மனித இருப்பிற்கு சவாலாக மாறத் தொடங்கியுள்ளன. கடவுளை, இறையுணர்வை மையப்படுத்தி வாழ வேண்டிய இதயங்களில் சுயநலமும், பகைமையும், தீமையும் பெருகி மனித முகத்தை, முகவரியை சின்னாபின்னமாக்குமளவிற்கு தாண்டவமாடுவதை காணுகின்றோம். ஏன் கிறிஸ்தவ சமூகங்களிலும், கடவுள் ஓரம்கட்டப்பட்டு, உலக மதிப்பீடுகளும், போக்குகளும் மனிதர்களது வாழ்வை தீர்மானிக்கும் சக்தியாக மாறியுள்ளது. கடவுள் நம்பிக்கை என்பது ஒரு மேலோட்டமான வாழ்வை தொடாத, மதிப்பீடுகளை நெறிப்படுத்தாத ஒன்றாகவே கருதப்படும் நிலைக்கு சென்றுவிட்டது. இத்தகைய நிலை மக்களை மதத்திலிருந்து ஓரமாக, ஒதுங்கி வாழும் நிலைக்கு தள்ளப்படுமளவிற்கு நுகர்வு கலாச்சாரம், தொடர்பாடல் சாதனங்கள், உலக போக்குகள் மனிதர்களை மாற்றியுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். கிறிஸ்தவ சமூகம் இன்னும் வளரவில்லை என்பதற்கு ஆண்டவனின் பெயரால் பங்குத் திருச்சபைகளில் நடக்கும் அநீதிகள், பிளவுகள், வேறுபாடுகள் என்பதே சான்றாக அமைகின்றது. இன்றும் மக்கள் கிறிஸ்தவத்தை வாழ்வை தொடாத ஒரு பக்தி மதமாகவே நோக்கும் நிலை காணப்படுவது கவலைக்குரியது.





## அலசலும் உரசலும்

(சமகால சமூக ஆன்மீக தொடர்) 08

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

### மீளவும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும்!

இத்தகைய பின்புலத்திலே நற்செய்தி அறிவிக்கப்பட்டு, கிறிஸ்தவத்தை ஒரு வாழ்க்கை முறையாக பின்பற்ற முடியாமல் வாழும் மக்களுக்கு மீளவும் நற்செய்தி அறிவிக்கப்படவேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். சடங்கு வாழ்விலிருந்து கிறிஸ்துவை மையப்படுத்திய வாழ்விற்கு மாற்றியமைக்க மீண்டும் திருமுழுக்கு பெற்ற கிறிஸ்தவர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்படவேண்டும். மீளவும் ஒரு 'புதிய பெந்தகோஸ்து'' இடம்பெற ஆவன செய்யவேண்டும்.

(உரசல் தொடரும்)

---

## பாரடா பாதையை



போசிட்டு விட்ட துயரம்
போகமுடியாத உயரம்
போனது போனதுதான்
போனால் போகட்டுமா வாழ்வு?

குறித்ததோர் செல்லில்
குவிந்ததோ உயிர்கள்
கும்பிட்ட ஆலயம் குலைந்தது
குறுக்கே வந்து யுத்தம் நுழைந்தது

தாறுமாறு வாழ்வு
தரணியில் கண்டதோ
தமிழர் உரிமை
தரமுடியாது எழுந்ததோ

நவீன ஆயுத வேட்டையில்
நம்மவர்தான் ஒத்திகையோ
நாடுதான் நாடகமோ
நம்மில் எத்தனை பேர் பாடையே?

குளறக் குளறக்
குற்றுயிர் வேட்கையும்
குனிந்து தலை போக்கும்
குண்டுடன் சொந்தம் எம் வாழ்க்கை

வாழ்க்கை வரண்டு போகுது
வசந்தம் நொந்து வேகுது
வன்முறை வழியற்றுப் போகுது – இருந்தும்
வாழத்துடிக்குது தமிழர் இனம்.

ஜெயம் ஜெகன் – புதுக்குடியிருப்பு

## திருத்தந்தையின் இம்மாதத்திற்குரிய சிறப்பான செபக் கருத்து

அரசியல் வாதிகள் நேர்மையோடு பணியாற்றவும், உண்மையை அன்பு செய்து அர்ப்பணிப்புடன் செயற்படவும் செபிக்கின்றார்.

## அமதிபுரம் பங்கில் மறைக்கல்வி மாணவர்களுக்கான கருத்தமர்வு

மறைக்கல்வி ஆண்டையொட்டி அமதிபுரம் பங்கின் மறைக்கல்வி மாணவர்களுக்கான கருத்தமர்வு கடந்த மாதம் 16ம்,17ம் திகதிகளில் பங்குத்தந்தையர்களின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றுள்ளது. இக்கருத்தமர்வுகளை அன்புக்கன்னியர் சபையை சேர்ந்த இரு அருட்சகோதரிகள் நெறிப்படுத்தினர்.

முதல் நாள் நிகழ்வுகள் 8.00 மணிக்கு வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களின் அறிமுகம், உடற்பயிற்சி, புனிதர்களின் பற்றிய கருத்துக்கள், ஆடல்கள், பாடல்கள் என்பன இடம்பெற்று மாலை 6 மணிக்கு அன்றைய நாள் நிகழ்வுகள் நிறைவு பெற்று. மீண்டும் மறுநாள் காலை 8.00 மணிக்கு வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டு உடற்பயிற்சிகள், தியானங்கள், பாடல்கள், கதைகள், வினாவிடைப் போட்டிகள், விளையாட்டுக்கள், குழுசெயற்பாடுகள், விவிலியம் பற்றிய அறிமுக கருத்துக்கள் நடைபெற்றன. இறுதியாக கலைநிகழ்வுகள், நாடகப்போட்டிகள் போன்றனவும் இடம் பெற்று, போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. மாலை 6 மணிக்கு கருத்தமர்வு யாவும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது.

□ செ. றெஜீஷா

## ரோஜாவும் முட்களும்

ஒரு மனிதன் ரோஜா செடியொன்றை நட்டு தினமும்
நீர் ஊற்றி அது பூக்குமுன் அதனை ஆராய்ந்தான்.
அதில் ஒருமொட்டும் முட்களும் இருப்பதை
அவதானித்தான். இவ்வளவு அழகியமலரைக் கொண்ட
மரத்தில் கூரியமுட்கள் எப்படிவருமென
சிந்தித்தான். இந்தசிந்தனையில் ஆழ்ந்தவன் செடிக்கு
நீர் ஊற்ற மறந்ததனால் பூ மலருமுன்
செடி மடிந்துவிட்டது.
மனிதரிடையேயும் அப்படியே. ஒவ்வொருவரின்
ஆன்மாவிலும் ஓர் அழகியமலருண்டு.
இறை குணங்கள் நாம் பிறக்கும்போதே
எமது பலவீனங்கள் மத்தியில் விதைக்கப்படுகின்றது.
அதிகமானோர் எம்மிலே முட்களான பலவீனத்தையே
நோக்குகின்றோம். இதனால் எம்மிலிருந்து எந்த
நன்மைகளையும் எதிர்பாக்க முடிவதில்லை என
எண்ணுகிறோம். எமது நன்மைத்தனங்களுக்கு நீர்
ஊற்ற மறக்கின்றோம் இதனால் அவைமடிகின்றன.
எம்மில் மறைந்துள்ளதை நாம் உணர்வதில்லை.
சிலர் தம்மில் உள்ள ரோஜா மலரை அறிவதில்லை
மற்றவர் சுட்டிக்காட்டும் போதே அறிகின்றனர்.
முட்களைக் கடந்து மலரை அடைவதே ஒருவருக்குக்
கிடைக்கும் பரிசாகும். ஒருவரின் பிழைகளை அறிந்து
பெருந்தன்மையுடன் அவர்கள் தங்கள் பிழைகளைக்
கடந்துசெல்ல உதவுவதே அன்பின் சிறப்பியல்பாகும்.
ரோஜாவை சுட்டிக் காட்டினால் இலகுவாக
முட்களை வெற்றி கொள்வார்கள்.
உலகில் மற்றவர்கட்கு முட்களையல்ல
மலர்களைக் காட்டுவதே எமது பணியாகும்.
இதனாலேயே மற்றவர்களில் அன்பைபெற முடியும்.
எமது தோட்டத்திலும் நாம் மலரலாம்.

நன்றி – Apostleship of prayer

## கிளாலி புனித கண்மணி மாதா ஆலயத்தில் 17 வருடங்களின் பின் முதல் நன்மை அருட்சாதன திருப்பலிக் கொண்டாட்டம்

01-09-2012 அன்று மேற்படி ஆலயத்தில் அருட்தந்தையர்கள் டியுக் வின்சன், பங்குத்தந்தை பத்திநாதர் தலைமையில் 10 சிறார்களுக்கு முதல் நன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டு திருப்பலி கொண்டாடப்பட்டது. இத்திருப்பலியில் மறையுரை ஆற்றிய அருட்தந்தை டியுக் வின்சன், இயேசு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு



நானே என்று தன்னை அறிவித்தார். இன்று முதல் முறையாக நற்கருணையை அருந்தபோன்றீர்கள். இயேசு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே என்று தன்னை அறிவித்த போது, அதை ஏற்றுக் கொள்வது மிகக் கடினம் என்று சொல்லி அவரைப் பின்சென்றவர்களில் பலர் அவரை விட்டு விலகினர். அன்று முதல் அவர்கள் அவரோடு சேர்ந்து செல்லவில்லை. அப்போது இயேசு பன்னிரு சீடரிடம், நீங்களும் போய்விட நினைக்கின்றீர்களா? என்று கேட்டார். அதே கேள்வியை எம்மையும் பார்த்துக் கேட்கின்றார். விண்ணகத்திலிருந்து இறங்கி வந்து நமக்கு வாழ்வு வழங்க காத்திருக்கும் இயேசுவை நாமும் உட்கொண்டு அவரோடு இருப்போம். அவரைப் போல் வாழ்வோம் என தெரிவித்தார்.

இப்பகுதி மக்கள் நாட்டில் நிலவிய போர்ச் சூழல் காரணமாக இடம் பெயர்ந்து தற்போது 15 வருடங்களுக்குப் பின்பு மீள்குடியேற்றம் செய்யப் பட்டிருக்கிறார்கள். இன்னிலையில் பங்குத்தந்தையின் தலைமையில் மறையாசிரியர் செல்வன் கிறிஸ்ரி கொண்சலஸ் அவர்களின் வழிநடத்தலில் 10 சிறார் களுக்கு முதல் நன்மை அருட்சாதனம் வழங்கப்பட்டு திருப்பலி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## இங்கிலாந்தில் 8வது உலக இளம் கிறிஸ்தவத் தொழிலாளர் மாநாடு

"வாழ்க்கையின் ஒரு பள்ளியைக் கட்டியெழுப்பு" என்ற தலைப்பில் இங்கிலாந்தின் அல்ரனில் 8வது உலக இளம் கிறிஸ்தவத் தொழிலாளர் மாநாடு ஆவணி 26ம் திகதி தொடக்கம் புரட்டாதி 5ம் திகதி வரை நடைபெற்றது.

நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இம்மாநாட்டில் இளம் தொழிலாளர்கள், மாணவர்கள், வேலையின்றி இருக்கும் இளையோர் என ஏறக் குறைய 50 நாடுகளிலிருந்து இளையோர் கலந்து கொண்டனர்.

இன்றைய இளையோர் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைப் பன்னாட்டினரின் கவனத்திற்குக் கொண்டுவரவும், இவர்களின் பிரச்சனைகளுக்குத் திரு அவை எவ்வாறு பதில் சொல்கிறது என்பதை அறியவும் இம்மாநாட்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் வீரரின் முன்னேற்றத்திற்குக் கத்தோலிக்கப் பாடசாலையும் காரணம்

தான் வளர்ந்த குடும்பமும், தன்னை உற்சாகப்படுத்திய கத்தோலிக்கப் பாடசாலையும் தனது முன்னேற்றத்திற்கு பெரும் காரணங்கள் என்று ஒலிம்பிக் வீரர் ஒருவர் கூறினார். ஆவணி மாதம் 29ம் திகதி இலண்டன் நகரில் ஆரம்பமாகிய மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் சார்பில் பல ஓட்டப் பந்தயங்களில் கலந்து கொள்ளும் பிறாயன் சைமன் என்ற இளைஞர் இவ்வாறு கூறினார்.

தான் பிறந்த மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட தவறான ஒரு சிகிச்சையால், பிறப்பிலிருந்தே இடுப்புக்குக் கீழ் உணர்விழந்த நிலையில் பிறந்த சைமன் நொஸ்றடாம் என்ற கத்தோலிக்கப் பாடசாலையில் சேர்ந்தபோது, அங்கிருந்த உடற்பயிற்சி ஆசிரியர் அளித்த தூண்டுதலால் தடகளப் போட்டிகளில் ஈடுபட முடிந்தது என்று கூறினார். ஆகஸ்ட் 29ம் திகதி முதல் செப்டம்பர் 9ம் திகதி முடிய நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் 110, 200, 400, 800 மீட்டர் ஓட்டங்களிலும், மாரத்தான் ஓட்டத்திலும் கலந்து கொள்கிறார்.

இம்முறை மாற்றுத் திறனாளிகள் ஒலிம்பிப் போட்டியில் 4,200 விளையாட்டு வீரர்கள் (166 நாடுகளைச் சேர்ந்த) பஙகெடுக்கின்றனர்.

## இத்தாவில் தூய பார்பரம்மா ஆலயத்தில் தமது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார் அருட்பணி. வ. அலன்

போரினால் சிதைவடைந்து, பற்றைக்காடாக காட்சி அளித்த தூய பார்பரம்மா ஆலயத்தினை புணர்நிர்மானம் செய்து, ஆலய வளாகத்தினை துப்பரவு செய்து திருப்பலி வழிபாட்டு கொண்டாட்டங்கள் வைப்பதற்கான இடமாக மாற்றியமைத்தனர் ஆலய மக்களும், புலோப்பளை மக்களும். இவ் ஆலயத்தினை புனர்நிர்மானம் செய்வதற்கு யாழ். ஆயர் அவர்களும் நிதி உதவி செய்திருந்




தார். ஒரு மாத காலப்பகுதியில் திருத்தி அமைத்து கட்டப்பட்ட ஆலயத்தில் முகமாலை, பளை பங்கின் முதல் குருவான திருவுளப்பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்பணி. வரப்பிரகாசம் அலன் அவர்கள் தமது முதல் நன்றிப் பலியினை ஒப்புக்கொடுத்தார். தமது மண்ணின் மைந்தனுக்கு ஆலய மக்களும் புலோப்பளை இறைமக்களும் சிறப்பான வரவேற்பினை அளித்தனர். மீள்குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் இக்காலப்பகுதியில் இவ்விழாவினை சிறப்பாக நடாத்துவதற்கு பங்குத்தந்தையும் இறைமக்களும் இணைந்து பணியாற்றினர்.

■ திரு. ஜோர்ஜ்

## பருத்தித்துறை மறைக்கோட்ட திருப்பாலத்துவ சபையினரின் ஊக்குவிப்பாளர்களுக்கான கருத்தமர்வு

22.08.2012 அன்று மேற்படி கருத்தமர்வில் அனைத்து பங்குகளிலிருந்து 35 ஊக்குவிப்பாளர்கள் பங்குகொண்டு பயனடைந்தார்கள். இக்கருத்தமர்வை மறைக்கோட்ட இணைப்பாளர் அருள் தந்தை பத்திநாதர் அடிகளார் ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கது. மறைக்கோட்ட முதல்வர் அருள் தந்தை மவுலிஸ் அடிகளாரின் ஆசீருடன் ஆரம்பமான இக்கருத்தமர்வு யாழ் மறைமாவட்டத்தில் முதல் முறையாக பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் இடம் பெற்றது சிறப்பம்சமாகும். இக்கருத்தமர்வு மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருள்தந்தை யூட் நிக்சன் தலைமையில் பல வளவாளர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இக்கருத்தமர்வில் தியானம், கருத்துரை, விளையாட்டு, குழு நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன.

## குருக்களுக்கான தொடர் உருவாக்கல் நிகழ்வு

**யாழ். மறைமாவட்ட குருக்கள் மன்றத்தினால் இளம் குருக்களுக்கான தொடர் உருவாக்கல் நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந் நிகழ்வின் ஊடாக குருக்கள் தம்முடைய ஆன்மீக வாழ்வையும், பணிவாழ்வையும் ஆழமாகச் சிந்திக்க உள்ளனர். 1-7 ஆண்டுகள் குருத்துவப் பணியை நிறைவு செய்தவர்களுக்கு இம்மாதம் 10-14ம் திகதி வரையும், 8-15 ஆண்டுகள் குருத்துவப் பணியை நிறைவு செய்தவர்களுக்கு 19-20 ம் திகதி வரையும் தொடர் உருவாக்கல் நிகழ்வு நடைபெறும்.**

## புனித சிந்தாத்திரை மாதா திருவிழா சாட்டி – 2012 யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலம்

யாழ் மறைமாவட்ட யாத்திரைத்தலமான சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலய திருவிழா 06.09.2012 அன்று கொடியேற்றத்துடன் நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 15-09-2012 (சனிக்கிழமை) அன்று கொண்டாடப்படும்.



- தினமும் நவநாள் வழிபாடுகள் மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.
- நற்கருணை விழா 14-09-2012 அன்று மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும்.
- திருவிழாத் திருப்பலி 15-09-2012 அன்று காலை 7.00 மணிக்கு ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

**"கடலலை தாலாட்டும் எங்கள் சாட்டி மாதாவே கரைகளில்லாதவளே எங்கள் தஞ்சம் நீயே"**

**கடலலை தாலாட்டும் சாட்டி சிந்தாத்திரை மாதாவின் அருளைப் பெற்று என்றும் நலமுடன் வாழ உங்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.**

**ஆலய பரிபாலகர்**
**சாட்டி, வேலணை - யாழ்ப்பாணம்.**

### நவநாட்களை சிறப்பிக்கும் பங்குகள் பின்வருமாறு

| | |
|---|---|
| 06-09-2012 வியாழன் | சாட்டி, அல்லைப்பிட்டி, பாசையூர், கரவெட்டி |
| 07-09-2012 வெள்ளி | ஊர்காவற்துறை, குருநகர், கோப்பாய், பருத்தித்துறை |
| 08-09-2012 சனி | நாரந்தனை, மிருசுவில், சாவகச்சேரி, செம்பியன்பற்று |
| 09-09-2012 ஞாயிறு | புங்குடுதீவு, சில்லாலை, பண்டத்தரிப்பு |
| 10-09-2012 திங்கள் | எழுவைதீவு, நாவாந்துறை, அனலைதீவு, கொழும்புத் துறை |
| 11-09-2012 செவ்வாய் | மண்டைதீவு, சக்கோட்டை, பேராலயப்பங்கு. |
| 12-09-2012 புதன் | கரம்பொன், மெலிஞ்சிமுனை, ஆனைக்கோட்டை, இளவாலை |
| 13-09-2012 வியாழன் | நெடுந்தீவு, மானிப்பாய், உரும்பிராய், உடுவில் |
| 14-09-2012 வெள்ளி | பொது வழிபாடு |
| 15-09-2012 சனி | பொது வழிபாடு |

## மண்டைதீவு பண்ணை வீதியில் தூய. பேதுருவானவரின் திருச்சுருபம்

பண்ணை வீதியில் இருந்து மண்டைதீவுக்கு செல்லும் நுழைவாயிலில் 300mக்கு அப்பால் எம் பாதுகாவலரின் திருச்சுருபமானது எம் பங்குத்தந்தை அருட்பணி. இ.ஜி.விஜின்ரஸ அடிகளாரின் முயற்சியில் எம் புனித பேதுருவானவர் இளைஞர் மன்றத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு 23.07.2012 அன்று இறைமக்கள் சூழ பங்குத்தந்தையால் ஆசீர்வதித்து திறக்கப்பட்டது. பண்ணையில் இருந்து 6kmக்கு அப்பால் உள்ள எம் கிராமத்துக்கு வரும் மக்கள் எல்லோரையும் வரவேற்பது போல புனிதரின் திருச்சுருபம் அதில் அமைந்து ஆசீர் அளிப்பது மகிழ்வான விடயமாகும். இச்சுருபம் இவ்விடத்தில் அமைய உதவிய எம் பங்குத்தந்தைக்கும் எம் மன்ற இளையோர் ஒவ்வொருவருக்கும், பங்கு நிர்வாக சபை உறுப்பினர்கள், வேலணை பிரதேச சபை தலைவர் அனைவருக்கும் எம் நன்றியை தெரிவிக்கின்றோம்.

ப. ஜகீஸ்
தூய. பேதுருவானவர்
இளையோர் மன்றம்
மண்டைதீவு.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.